www.janasakthi.in janasakthieditor@gmail.com janasakthi Tholaikatchi CPI Tamilnadu



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

CPI 100 Years இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925-2025

மலர் 88 இதழ் 07 | 2025 மே 18 - மே 24 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

# நாடாளுமன்றத்தை உடனே கூட்டு!

## பிரதமர் மோடிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

**தேசப் பாதுகாப்பு, இறையாண்மை, வெளியுறவுக் கொள்கை தொடர்பான முக்கியப் பிரச்சனைகள் குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும், நாட்டின் மிக உயர்ந்த ஜனநாயக அமைப்பான நாடாளுமன்றத்தின் மூலம் மக்களுக்குப் பொறுப்புக்கூற கடமைப்பட்டவர் பிரதமர். இந்தப் பொறுப்புக்கூறலில் இருந்து அவர் ஒருபோதும் விலகிச் செல்ல முடியாது. எனவே நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.**



இதுதொடர்பாகக் கட்சியின் தேசியச் செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்திய மக்களும் ஜனநாயக சக்திகளும் உறுதியுடன் ஒன்றுபட்டு நிற்கின்றனர். பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் 26 அப்பாவிகளை இழந்த துக்கத்தில் நாடு ஆழ்ந்திருந்த போது, 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை குறித்து பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அதில் தேச நலன் சார்ந்த முக்கியமான கேள்விகளுக்கும் சிந்தூர் நடவடிக்கை குறித்தும் விளக்கம் அளிக்க அவர் தவறிவிட்டார்.

பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், அணு ஆயுத அச்சுறுத்தலை இந்தியா பொறுத்துக் கொள்ளாது என்றும், எந்தவொரு பயங்கரவாத சவாலையும் எதிர்கொள்ள நாடு தயாராக இருக்கிறது என்றும் உறுதியளித்ததைத் தவிர, பேசிய அனைத்தும் வார்த்தை ஜாலங்களே. அவரது உரை, பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கான நம்பகமான வழியைச் கோடிட்டுக் காட்டத் தவறிவிட்டது. அவரது உரையில் இடம்பெற்றுள்ள பிரகடனங்கள் தெளிவாக இல்லை. சூழ்நிலையின் அடிப்படையான சிக்கலை அடையாளம் காணவும், சர்வதேச நாடுகளின் பங்கேற்பு மற்றும் பொறுப்புக்கூறலைக் கட்டாயமாக்கவும் தவறிவிட்டது.

பின்னணியில் இருந்து செயல்பட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியிருப்பது குறித்து பிரதமர் மோடி எதுவும் பேசாமல் மிகக் கவனமாகத் தவிர்த்துள்ளார். இது வெளிப்படைத்தன்மை, காஷ்மீர் பிரச்சனையானது இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருதரப்புக்கு மட்டுமே தொடர்புடையது என்ற இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.

இருநாடுகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில், வெளிசக்திகள் அதிகாரப்பூர்வமற்ற வகையில் செல்வாக்கு செலுத்தினால், அவற்றின் தன்மை மற்றும் பங்கு குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அமைதியை ஏற்படுத்த பேச்சுவார்த்தை மட்டுமல்ல, உண்மை, வெளிப்படைத்தன்மை, நீதி ஆகியவை அவசியமாகும். அமைதியை ஏற்படுத்துவதில் அரசுக்கு அக்கறை இருக்குமேயானால், அதன் ராஜதந்திர நடவடிக்கைகள் தெளிவாக வெளிப்படுத்தப்படுவதுடன், உள்நாட்டுப் பொறுப்புக்கூறலுக்கான உறுதிப்பாட்டுடன் செயல்பட வேண்டும்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில், எல்லை தாண்டிய பயங்கரவாத கட்டமைப்புகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கான பாகிஸ்தானின் எதிர்வினையில், இராணுவ வீரரும்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

## மண்டியிட்டு மன்னிப்பு கேட்டார் பாஜக அமைச்சர்

மத்தியப் பிரதேச அமைச்சர் குன்வர் விஜய் ஷா "எங்கள் மகளை விதவைகளாக்கியவர்களுக்கு, அவர்களது சொந்தச் சகோதரியைக் கொண்டு பாடம் கற்பித்தோம்!" என்று பேசினார்.


இந்திய ராணுவம் சார்பாக பத்திரிகையாளர்களைச் சந்தித்த கர்னல் சோபியா குரேஷி ஒரு முஸ்லிமாம்! அதனால் அவர் பஹல்காம் படுகொலைகளைச் செய்த பயங்கரவாதிகளின் சொந்தச் சகோதரியாம்!

மோடி, இந்த குன்வர் உள்ளிட்ட இந்(து)திய சாம்ராஜ்யபதிகள், அந்த முஸ்லிம்களின் சகோதரியை அனுப்பிக் கருவறுத்து விட்டார்களாம்!

அருவருக்கத்தக்க பேத்தல்! இதயத்திலும் மூளையிலும் நிறைந்து கிடக்கும் மதவெறிச் சாக்கடை, வார்த்தைகளில் வழிகிறது.

ஷாவின் கருத்துக்களைத் தானாக விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் தீவிரமாகக் கவனித்து, அவர் மீது பாரதிய நியாய சன்ஹிதாவின் 152, 196(1)(b), and 197(1)(c) எஃப்ஐஆர் பதிவு செய்ய மத்தியப் பிரதேசக் காவல்துறைக்கு உத்தரவிட்டது.

மேலும், இந்த உத்தரவை உடனடியாக மாநிலக் காவல்துறை இயக்குநர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பி, அது நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யுமாறு ஏஜி அலுவலகத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.



இந்த வழக்கின் அடுத்த விசாரணை மே 15 ஆம் தேதி நடைபெறும் என்று, நீதிமன்றம் இந்த விஷயத்தைப் பட்டியலில் முதலிடத்தில் வைத்துள்ளது.

வீராதி வீரரான விஜய் ஷா, சாவர்க்கர் மரபுப்படி, சட்டென்று மண்டியிடும் சங்கிகளின் சாணக்கியத்தனத்தைக் கையில் எடுத்தார்.

"விஜய் ஷா என்ற நான், ஒவ்வொரு சமூகத்தின் உணர்வுகளையும் புண்படுத்திய எனது சமீபத்திய அறிக்கையால் வெட்கப்படுகிறேன், வருத்தப்படுகிறேன், மேலும் எனது இதயத்தின் அடிப்பகுதியில் இருந்து மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். நமது நாட்டின் சகோதரி சோபியா குரேஷி தனது தேசியக் கடமையை நிறைவேற்றும் போது சாதி மற்றும் சமூகத்திற்கு அப்பாற்பட்டுப் பணியாற்றியுள்ளார்," என்று ஷா வீடியோ வெளியிட்டார்.

"எனது சமீபத்திய அறிக்கையில் சில பொருத்தமற்ற வார்த்தைகள் வெளிவந்தாலும், எனது நோக்கங்கள் எப்போதும் தெளிவாக இருந்தன. அனைவரிடமும், குறிப்பாக என் சகோதரி சோபியா குரேஷியிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்"

"நான் தியாகிகள் மற்றும் ராணுவ வீரர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவன். பஹல்காம் சம்பவத்தால் நான் உணர்ச்சிவசப்பட்டேன். எனது வார்த்தைகள் யாரையாவது அல்லது எந்தச் சமூகத்தையும் புண்படுத்தியிருந்தால் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். கர்னல் சோபியா குரேஷி நாட்டின் பெருமை, அவர் என் சகோதரி போன்றவர். ஒரு தடவை அல்ல பத்து தடவை மன்னிப்பு கோருகிறேன்" என்று அவர் கூறினார்

### உண்மைகள் வெளிப்படுவது நாட்டுக்கு நல்லது! கட்சிக் கடிதம்

ஏகாதிபத்திய நாடுகள் தங்களது ஆயுதங்களை இருநாடுகளுக்கும் தாராளமாக வழங்குவார்கள். இனமாக அல்ல, அவற்றுக்கு விலை வைப்பார்கள். ஆயுதங்களை வாங்குவதற்குக் கடனும் வழங்குவார்கள். இப்படிக் கொடுத்து இருநாடுகளையும் கடன்கார நாடாக மாற்றி, தங்கள் நாட்டு முதலாளிகளின் செல்வங்கள் பன்மடங்கு அதிகரிக்க வழிவகை செய்வார்கள்.

... பக்கம் 2

### 'வள' மாணவர்களுக்கான மருத்துவ நுழைவுத்தேர்வு

வளம் கொண்ட பகுதியினருக்குப் பயிற்சிக்கான வாய்ப்புகள், இந்தப் பயிற்சிக்காக செலவிடப்படும் செல்வம், இவற்றால் அவர்கள் எடுக்கும் கூடுதல் மதிப்பெண்கள் ஆகியன அவர்களுக்கு இயல்பாகவே ஓர் உயர்நிலையைப் பெற்றுத் தந்து விடுகின்றன. இதனால் வளமான மாணவர்களே பெரிதும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள குறைந்த கட்டண இடங்களை அள்ளிச் செல்கின்றனர்.

... பக்கம் 3

### "அடிக்காதீங்க, அண்ணா" தலையங்கம்

மிக அதிக எண்ணிக்கையில் பெண்கள் வேலைக்குச் செல்லும் மாநிலம் தமிழ்நாடு. அவர்கள் பணிக்கு வரும்போதும், திரும்பிச்செல்லும் போதும் பாதுகாப்புத் தர வேண்டியது வேலையளிப்பவரின் சட்டப்பூர்வ கடமை. இது ஏட்டளவில் உள்ளது. தமிழ்நாடு அரசு இதிலும் தனிக்கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது.

... பக்கம் 4

### போரும் போலி தேசபக்தியும்

இந்தியா - பாகிஸ்தான் போர்ப் பதற்றத்தை வைத்து பாஜக, ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட இந்துத்துவ அமைப்புகள் தங்களின் மதவெறி அரசியலைத் தீவிரப்படுத்தியுள்ளன. குறிப்பாக பாஜக ஆளும் மாநிலங்களில் இஸ்லாமியர்களுக்கு எதிராக வெறுப்பையும் மத வன்முறையும் தூண்டும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

... பக்கம் 8

### இராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு விழா



இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தலைவர்களில் ஒருவரும் தமிழ்ச்சமூகம் போற்றும் எழுத்தாளருமான இராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு விழா சென்னையில் கோலாகலமாக நடைபெற்றது. இதில் "போராளி இராஜம் கிருஷ்ணன் களத்திலும் வாழ்விலும்" நூலை கனிமொழி கருணாநிதி வெளியிட்டார்.

... பக்கம் 16

கட்சிக் கடிதம்

# உண்மைகள் வெளிப்படுவது நாட்டிற்கு நல்லது



போர்க்குணமிக்க தோழர்களே !

**இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட திடீர்ப் பதற்றம் பெரும் கவலை கொள்ளச் செய்தது.**

உலகில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் மனப்பூர்வமாக விரும்புவது போரற்ற உலகம். இரு நாடுகளுக்கிடையே போர் மூளுமேயானால் இரு நாடுகளைச் சேர்ந்த ராணுவ வீரர்களில் உயிர்கள் மட்டும் பலியாவது இல்லை. அப்பாவின் மக்கள், அதுவும் சாதாரண ஏழை, எளிய மக்கள் எல்லையோரம் உள்ள குடிசை வாழ் மக்கள் என மக்களின் உயிர்கள்தான் எண்ணில் அடங்காத எண்ணிக்கையில் பலியாவார்கள், வீடுகள் தரைமட்டமாக்கப்படும்.

பொருளாதார நெருக்கடிகள் அதிகரிக்கும், அத்தியாவசியப் பண்டங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களின் விலைகளும் பன்மடங்கு பெருகும்.

வர்த்தகச் சூதாடிகள் வாய்ப்பைப் பயன்படுத்தித் தங்களின் பொருளாதாரத்தைக் காரணம் காட்டி தேசபக்தியோடு பெருக்கிக் கொள்வார்கள்.

ஏகாதிபத்திய நாடுகள் தங்களது ஆயுதங்களை இருநாட்டுக்கும் தாராளமாக வழங்குவார்கள். இனாமாக அல்ல, மாறாக விலை வைப்பது மட்டுமல்ல, கடனும் வழங்குவார்கள். இரு நாடுகளையும் கடன்கார நாடுகளாக மாற்றி, தங்கள் நாட்டின் முதலாளிமார்களின் செல்வம் பன்மடங்கு உயர்ந்திட வழிவகை செய்வார்கள்.




நேட்டோ நாடுகளுடன் உக்கரையினைச் சேர்த்துக் கொள்வதாக அறிவித்தார்கள். விளைவு ரஷ்யா உக்ரைன் போர் தொடங்கி இரண்டு ஆண்டுகள் முடிந்து மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

இவரில் யார் வெற்றி பெற்றார்கள் என்பதனைவிட இரு நாடுகளுமே கடும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன. குறிப்பாக உக்ரைன் கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகி இருப்பதுடன், அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஏறத்தாழ அடிமையாகிவிட்ட நிலை ஏற்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு உதவிடுவோம், ரஷ்யாவை துவம்சம் செய்வோம் எனக் கொக்கரித்த நாடுகள், உக்கிரனுக்கு ஏராளமான ஆயுதங்களைக் குவியலாக வழங்கி அந்நாட்டைக் கடன்கார நாடாக மாற்றி, தற்போது தாங்கள் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடு என நிர்பந்திக்கின்றார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் கொடுத்த கடனுக்கு உக்ரைன் நாட்டில் உள்ள கனிம வளங்களையெல்லாம் தனதாக்கிக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கின்றது.

உக்ரைன் நாடும் வேறு வழியின்றி அமெரிக்காவின் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்க வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகி பரிதாபமான நிலையில் உள்ளது.

ஏகாதிபத்திய நாடுகளை நம்பி, ரஷ்யாவைப் பகைத்து, அதனை எதிர்கொள்ளலாம் என இறுமாப்போடு நேட்டோ கூட்டணியில் அங்கம் வகித்தே தீருவேன் என அடம்பிடித்து, அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட நிலைக்கு உக்ரைன் தள்ளப்பட்டுள்ளது. போரும் முடிந்த பாடில்லை.

இஸ்ரேல் நாடு ஏகாதிபத்திய நாடுகளின் துணையோடு பாலஸ்தீன மக்களுக்கு எதிரான யுத்தத்தை மட்டுமல்ல, நாட்டையே முற்றிலுமாக அழித்தொழித்து இன வெறியாட்டம் போடுகின்றது.

அமெரிக்கா ஹமாஸ் பகுதியை விலை கொடுத்து வாங்குவேன், அது அமெரிக்காவின் ஒரு பகுதி என டிரம்பு பகிரங்கமாகத் தெரிவிக்கின்றார்.

அப்பாவி மக்கள் நாள்தோறும் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டு வருகின்றார்கள்.

இத்தகைய சூழலில்தான் பாகிஸ்தான் நாட்டில் முகாம் அமைத்துத் தங்களின் பயங்கரவாதச் செயலை வெளிப்படுத்தி வருபவர்கள் காஷ்மீர் மாநிலத்தில் பஹல்காம் பகுதியில் 2025 ஏப்ரல் 22ல் சுற்றுலாப் பயணிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 26 அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றார்கள்.

இதற்கு பதிலடியாக இந்திய ராணுவம் மே 7ஆம் நாள் அதிகாலை பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள பயங்கரவாதிகளின் முகாம்களை 30 நிமிடங்களுக்குள்ளாக, மிகத் துல்லியமாகத் தாக்கி அழித்தது. அம்முகாம்களில் உள்ள பயங்கரவாதிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 100க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

ஆத்திரப்பட்டவனுக்குப் புத்தி மட்டு என்பது போல், பாகிஸ்தான் ராணுவம் நடந்து கொண்டது. முகாம்களில் இறந்தவர்களுக்கு பாகிஸ்தான் ராணுவம் அஞ்சலி செலுத்துகின்றது.




இவை கட்டுக்கதை அல்ல, படத்துடன் செய்திகள் வெளிவந்துள்ளன.

அவ்வாறு எனில் பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் இராணுவம் முழு ஆதரவு அளித்து வருகின்றது என்ற குற்றச்சாட்டு உறுதி செய்யப்படுகின்றது. பயங்கரவாதிகளை ஊக்குவிப்பது, வளர்ப்பது, ஆதரவளிப்பது என்பது அந்நாட்டிற்கே கேடு விளைவிக்கும். வினை விதைத்தவன் வினையைத்தான் அறுவடை செய்ய முடியும் என்பதனை பாகிஸ்தான் தற்போது உணர்ந்துள்ளதாகத் தெரிகின்றது.

பஹால்காம் தாக்குதலைத் தொடர்ந்து ஏப்ரல் 22 முதல் மே 10 மாலை 5 மணி வரை ஏறத்தாழ 19 நாட்கள் நாடு பெரும் பதற்றத்தில் இருந்தது.

பிரதமர் வெளிநாடு சுற்றுப்பயணத்தில் இருந்தவர் உடனடியாகத் தாயகம் திரும்பினார். திரும்பிய வேகத்தில் விமான நிலையத்திலேயே ஆலோசனை நடத்தினார்.

பின் அமைச்சரவைக் கூட்டம், முப்படைத் தளபதிகளுடன் ஆலோசனை, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித் ஷா, வெளியுறவு அமைச்சர் ஜெய் சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இவர்களுடன் கூட்டாக, தனியாக பிரதமர் சந்திப்புகளைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

அவர் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டங்களை வித விதமாகப் படமெடுத்து ஊடகங்களில் வெளியிட்டவாறு இருந்தனர். பிரதமர் மிகத் தீவிரமாக, சீரியஸாக இறுக்கமான முகபாவனையுடன், கவலை தோய்ந்த முகமாக உள்ள படங்கள் வெளியிடப்பட்டன. திரும்பத் திரும்ப இடைவெளியின்றித் தொடர்ந்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டங்கள், அக்கூட்ட முடிவுகள், அரசால் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கை மற்றும் படங்கள் ஒவ்வொன்றும் பதற்றத்தை ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

இவ்வளவுக்கு மத்தியில் தாங்க முடியாத பணிச்சுமைகளுக்கிடையே, பணிச்சுமையெனில் சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் பிரதமர் இந்த இடைபட்ட 19 நாட்களில் ஒவ்வொரு நாளும் சரியாக உணவருந்த வில்லை, பிளாஸ்கில் உள்ள வெந்நீரை ஊற்றிக் குடித்துப் பசியைப் போக்கிக்கொண்டார். நாள்தோறும் 24 மணி நேரத்தில் இரண்டு மணி நேரம் மட்டுமே உறங்கினார், மற்ற 22 மணி நேரமும் நாட்டைப் பற்றியே கவலை கொண்டிருந்தார்.

இப்படிப்பட்ட பணிச்சுமைகளுக்கிடையே பீகாருக்குச் சென்று நிகழ்ச்சியில் பங்கு பெற்று, அங்குதான் தன் கோப, குரூர முகத்துடன் அறிவித்தார். பயங்கரவாதிகள் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாதபடி பதிலடி தரப்படும் என்று அறிவித்தார் என செய்திகள் வந்தன.

கடுமையான நெருக்கடி மிக்க நேரத்தில் தலைநகரத்தில் இல்லாமல் பீகாருக்கு ஏன் பறந்து சென்றார்? அங்கு போய் அதிரடி அறிவிப்பை ஏன் வெளியிட்டார்? என்று பொதுமக்கள் கேட்கின்றார்கள். சோழியன் சிண்டு சும்மா ஆடாது என்று நம் ஊர் பழமொழி ஒன்று உண்டு என்றும் பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

நாடு முழுவதும் பதற்றம் மேலும் தீவிரமடைகின்றது. எல்லைகளில் படைகள் வைக்கப்பட்டு விட்டன. எந்நேரமும் எதனையும் செய்ய இராணுவத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு விட்டது. நாடு முழுவதும் பாதுகாப்பு ஒத்திகைகள் நடைபெறுகின்றன. காஷ்மீர் பகுதிகளில் பதுங்கு குழிகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

தொலைக்காட்சிகள் 24 மணி நேரமும் இந்தியா பாகிஸ்தான் மீறல்கள், துப்பாக்கிச் சத்தங்கள் எனச் செய்திகளைத் தங்கு தடையின்றி, விளம்பர நேரங்கள் போக மீதமுள்ள நேரங்களில் வெளியிட்டு வருகின்றன. நாளேடுகளில் முதல் பக்கத் தலைப்புச் செய்திகள் போதாது என்று உள்பக்கச் செய்திகளையும் பக்கம் பக்கமாக வெளியிட்டு வந்தன. இரு நாடுகளுக்கிடையே போர் நடக்கக் கூடாது, பதற்றத்தை தணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என உலகின் பல்வேறு நாடுகளும் தெரிவித்து வந்தன.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# வள மாணவர்க்கான மருத்துவ நுழைவுத் தேர்வு



மே.து.ரா.

**இந்திய மருத்துவக் கழகம் என்னும் சட்ட முறை அமைப்புதான் 2010இல் இந்த நீட் எனும் நுழைவுத் தேர்வை முதலில் பரிந்துரை செய்தது.**

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் பெரும் தொகையினைப் பெற்றுக்கொண்டு, குறைந்த மதிப்பெண் கொண்ட தகுதி இல்லாதோருக்கு இடம் தருவதைத் தடுக்கத்தான் நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டது.

அத்துடன், புதுச்சேரியில் உள்ள சிப்மர் (JIPMER), தில்லியில் உள்ள அனைத்திந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், படையினர் நடத்தும் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றோடு, மாநிலங்களின் தேர்வுகள் எனப் பலவகைப்பட்ட நுழைவுத் தேர்வுகளை ஒரு மாணவர் எழுதுகின்ற நிலை அப்போது இருந்ததால், ஒருங்கிணைந்த ஒரே தேர்வு என்னும் திட்டம் தீர்வாகக் காட்டப்பட்டது.

2010இல் காங்கிரசார் கொண்டுவந்த நுழைவுத் தேர்வுத் திட்டத்தில், மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தும் பிரிவுகள் இல்லை. ஆனால், மாநில அரசுகள் வேண்டுமெனில், ஒன்றிய அரசின் நுழைவுத் தேர்வு மதிப்பெண்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற விருப்ப உரிமை தரப்பட்டிருந்தது.

இத்தகையதொரு நடைமுறை, வேறு சில நுழைவுத் தேர்வுகள் தொடர்பாக இருந்துவருவதுதான். எடுத்துக்காட்டாக, ஒன்றியத்தில் உள்ள 21 இந்திய மேலாண்மை நிறுவனங்களுக்காக (அய்.அய்.எம்.), பொது நுழைவுத் தேர்வு (கேட்) நடத்தப்படுகிறது. ஆனால், இந்த நுழைவுத் தேர்வின் மதிப்பெண்களை அய்.அய்.டி. உள்ளிட்ட நூற்றுக் கணக்கான அரசு சார்ந்த மற்றும் தனியார் மேலாண்மை நிறுவனங்கள் தங்களது சேர்க்கைக்காகப் பயன்படுத்திக்கொள்கின்றன. இது வலியுறுத்தல் ஏதுமின்றி விருப்ப அடிப்படையில் ஏற்கப்படுகிறது.

பாரதிய சனதாக் கட்சியினர் 2014இல் ஒன்றிய ஆட்சியைப் பிடித்த பின், அவர்களோடு தொடர்புடைய ‘சங்கல்ப்’ என்ற அமைப்பு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து நீட் எனப்படும் நுழைவுத் தேர்வு அனைவருக்கும் நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தியது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, பா.ச.க. அரசு நுழைவுத் தேர்வு நடத்த முன்வந்தது. உச்ச நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது.


மருத்துவநுழைவுத் தேர்வினை எதிர்த்துப் பல வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தாலும், அய்ந்து நீதியர்கள் கொண்ட உச்ச நீதிமன்ற அரசமைப்பு அமர்வு 2016 ஏப்ரல் 11இல் நுழைவுத் தேர்வினை இறுதியில் உறுதி செய்தது.

மருத்துவக் கல்வியில் தகுதி மட்டுமே அடிப்படையாக இருக்கவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் பாடம் நடத்துகிறது. ஆனால், கடந்த ஆண்டுகளில் நீட் எனப்படும் நுழைவுத் தேர்வின் வழியாகத் தகுதியுடையோர் மட்டும்தான் சேர்ந்தார்களா என்பதை உச்ச நீதிமன்றம் உறுதி செய்ய முயற்சிக்கவில்லை. அத்துடன், தகுதியிருந்தும் பலர் கட்டணம் செலுத்த வழியின்றி, மருத்துவப் படிப்பில் சேர இயலாமல் விடுபட்டதையும் உச்ச நீதிமன்றம் பார்க்கத் தவறிவிட்டது.

அதாவது, மிகு மதிப்பெண் இருந்தும் பலர் மருத்துவக் கல்வியில் சேர இயலாததையும், மிகக் குறைந்த மதிப்பெண்ணுடன் பலர் மருத்துவப் படிப்பில் சேர்வதையும் உச்ச நீதிமன்றம் கண்டுகொள்ளவில்லை.

நிரம்பாமல் இருக்கும் இடங்களை நிரப்பவேண்டும் என்ற பெயரில் தகுதி இல்லாதோர் சேர்க்கப்படுகின்றனர்.

தன்நிதி மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் நன்கொடை. முதலீட்டுக் கட்டணம் என்ற வெவ்வேறு பெயர்களில் பெருந்தொகை பெறுவதைத் தடுக்கும் வழி காணாமல், தகுதி என்ற பெயரில் நுழைவுத் தேர்வினைப் பரிந்துரைத்தபோது, இந்திய ஒன்றிய மக்கள் பிரிவினரின், சமூக பொருளிய பண்பாட்டு இருப்பிட நிலைமைகளை உச்ச நீதிமன்றமும் ஒன்றிய அரசும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான் வியப்பாக இருக்கிறது.




அத்துடன், தமிழ்நாட்டில் நுழைவுத் தேர்வு ஏதுமின்றிப் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருந்த தகுதிவழிச் சேர்க்கை முறைக்கு இதில் மாற்றுத் தீர்வு எதுவும் கொடுக்கப்படவில்லை.

ஒன்றிய அரசின் பள்ளிகளில் இருக்கும் பாடத் திட்டங்கள் இந்த தேர்வுகளுக்கு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட்டன. இதனால், இந்த நுழைவுத் தேர்வு பல்வேறு மாநில மாணவர்களுக்குப் பேரிடியாக வந்து விழுந்தது என்றுதான் கூறவேண்டும்.

மராட்டியம், குசராத், ஆந்திரம், தெலுங்கானா, பஞ்சாப் போன்ற பல மாநிலங்கள் தனித்தனியே தங்களது பாடத்திட்டங்களைக் கொண்டு, தங்களது மாநிலங்களில் நுழைவுத் தேர்வினை அதுவரை நடத்தி வந்தன.

தமிழ்நாட்டைப் பொருத்த வரை, ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தைவிடச் சற்று மேலான பாடப் பகுதிகளைக் கொண்டதாகவும் தமிழ்நாட்டினுடைய பாடத்திட்டம் இருக்கிறது. இதனால் கல்வித்தரம் குறைவென்ற குற்றச்சாட்டும் எழ வாய்ப்புகள் இருக்கவில்லை.

ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றின் பாடத்திட்டங்களில் பல ஒப்புமைகள் இருந்தாலும், கற்பித்தல் முறை, தேர்வு முறை, புரிதலுக்கான வழிமுறைகள், பயன்பாட்டுப் பார்வை போன்றவற்றில் பல வேறுபாடுகள் நிலவின; இன்று வரை அவை நீடிக்கின்றன.

மேலும், நீட் என்று அழைக்கப்படும் நுழைவுத் தேர்வு முறையும் முற்றிலும் வேறானதாக இருந்தது.

முதல் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை ஒரு குறிப்பிட்ட பாடத்திட்டத்தில் படித்து வந்த மாணாக்கர், மருத்துவ நுழைவுத் தேர்வுக்காக மட்டும் வேறொரு பாடத்திட்டத்தினைப் பயிலவேண்டிய நிலை ஏற்பட்டது.

அத்துடன், மாணவர் அறிதிறனை மதிப்பிடும் முறையும் நுழைவுத் தேர்வில் வேறானதாக அமைந்திருந்தது.

12ஆம் வகுப்பிற்கான தேர்வுகளில் மதிப்பெண்கள் பெறுவது தமிழ்நாட்டில் தொழிற்கல்வி, கலை, அறிவியல் கல்லூரிகள் உள்ளிட்ட பல்வேறு உயர் கல்வி நிறுவனங்களுக்கு அடிப்படையாக இருப்பதால், இன்று வரை அவற்றை முற்றிலும் புறக்கணித்துவிட்டு மருத்துவ நுழைவுப் படிப்புக்காக மட்டும் காலத்தை ஒதுக்க இயலாத நிலையில் தமிழக மாணாக்கர் இருந்தனர்.

பன்னிரண்டாம் வகுப்புக்கான தேர்வுகள் முடிந்த பின் இடைப்பட்ட ஓரிரு திங்கள்களுக்குள் தங்களுக்குத் தொடர்பில்லாத, முற்றிலும் வேறான ஒன்றிய அரசின் பாடத்திட்டங்களை முழுமையாக உள்வாங்கிக்கொள்வதும் பயிற்சி பெறுவதும் தேர்வு முறையில் கடைப்பிடிக்கப்படும் கருத்துருக்களின் பயன்பாட்டு முறைமைகளைக் கற்றுத் தேர்வதும் இயலாததாக அமைந்துவிடுகிறது.

இதனால், மருத்துவக் கனவில் இருப்போர், பன்னிரண்டாம் வகுப்புக்குப் பின்னர் ஓராண்டு பயிற்சி நிறுவனங்களில் பெரும் செலவுகளைச் செய்து சேரவேண்டிய இன்றியமையாமையும் ஏற்படுகிறது.

தமிழ்நாடு அரசு மருத்துவ நுழைவுத் தேர்வுக்குப் பயிற்சி தருகின்ற வாய்ப்புகளை ஆங்காங்கே ஏற்படுத்தித் தந்தாலும், குறுகிய காலத்தில் தங்களைப் புதுப்பித்துக்கொள்ளப் பலரால் முடிவதில்லை.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளையே நம்பியிருக்கும் எளிய ஏழை ஊரகப் பகுதி மாணவர்கள் இதனால் பெருமளவில் புறக்கணிக்கப்பட்டோராக மாறிவிடுகின்றனர்.

நீட் நுழைவுத் தேர்வினால் மாணவர்களிடையே சில பாகுபாடுகள் இயற்கையாகவே எழுந்துவிடுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

1. நகர்ப்புற, ஊரக மாணாக்கர் என்ற பாகுபாடு

2. அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் தனியார் பள்ளிகளுக்கு இடையேயான வேறுபாடுகள்

3. ஒன்றிய அரசின் பாடத் திட்டத்தில் படிக்கும் மாணவர்களுக்கும் மாநிலப் பாடத் திட்டத்தில் படிக்கும் மாணவர்களுக்கும் இடையே உருவாகும் வேறுபாடு

4. தனியாகப் பயிற்சி பெறும் மற்றும் பயிற்சி பெறாத மாணாக்கருக்கு இடையில் எழும் பாகுபாடுகள்

5. வளம் கொண்டோர் மற்றும் வளமில்லாதோர் என்ற பாகுபாடு.

இவற்றுக்கான தீர்வினைக் காணாவிட்டால் சமூகநீதி என்பது பெரும்பகுதி மக்களுக்கு மறுக்கப்பட்டதாகிவிடும்.

தமிழ்நாட்டில் 2024ஆம் 7,60,606 பேர் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வினை எழுதினர். இவர்களில் 3,42,000க்கு மேற்பட்டோர் அரசுப் பள்ளிகளில்தான் படித்து முடித்திருந்தனர். அதாவது 45% அளவினர் அரசுப் பள்ளிகளைச் சார்ந்திருந்தனர். எஞ்சியோர் அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் ஆவர்.

தேர்ச்சி என்று எடுத்துக்கொண்டால், அரசுப் பள்ளிகள் 91.02%, அரசு உதவி பெறும் பள்ளிகள் 95.49%, தனியார் பள்ளிகள் 98.70% என்ற அளவில் அமைந்து, அனைத்துமாகச் சேர்ந்து 94.56% தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இவற்றைப் பார்க்கும்போது அரசுப் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி அளவு பாராட்டத் தக்கதாகத்தான் இருக்கிறது.

ஆனால், நீட் தேர்வுக்கு முன்னர் 0.7% மாணவர்களே மருத்துவக் கல்லூரிகளில் சேரும் வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். ஆனால், நுழைவுத் தேர்வின் அறிமுகத்துக்குப்பின் இந்த அளவு குறைந்து 0.1% மாணவர்கள் மட்டுமே மருத்துவக் கல்லூரிகளில் இடம் பிடிக்க முடிந்தது. இந்த அவலத்தைப் புறந்தள்ளிவிட இயலாது.

நுழைவுத் தேர்வுக்கு முன்னர்கூட மிகக் குறைந்தோரே மருத்துவக் கல்லூரிகளில் சேர முடிந்தது என்றாலும், பின்னர் அதைவிட எண்ணிக்கை குறைந்துவிட்டதைத் தெளிவாகக் காண முடிகிறது.

ஒன்றிய அரசுப் பாடத்திட்டத்தில் படித்தோர் 2024இல் 74,337 பேர் மட்டுமேயாவர். அவர்களின் தேர்ச்சி அளவு 98.74% ஆகும்.

அதாவது, ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தில் படித்தோருக்கும், மாநில அரசின் பாடத்திட்டத்தில் படித்தோருக்கும் இடையேயான தேர்ச்சி அளவில் பெருத்த வேறுபாடுகள் இருக்கவில்லை.

சமூகபொருளியபண்பாட்டுஇருப்பிடக் காரணிகளால் மட்டுமே அரசுப் பள்ளி மாணவர்கள் மிகு மதிப்பெண்கள் பெற்று மருத்துவக் கல்லூரிகளில் இடம்பிடிக்கும் உயர் நிலையினை அடைய முடியாமல் போய்விடுகிறது. மேலும், நுழைவுத் தேர்வுகளும் பெருத்த தடையாக இடைவெளியினை இப்போது மிகுதிப்படுத்திவிட்டதைக் காணலாம்.

இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டுதான், தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் 7.5% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.

வளம் கொண்ட பகுதியினருக்கு, பயிற்சிக்கான வாய்ப்புகள், அத்தகைய பயிற்சிகளுக்காகச் செலவிடக்கூடிய செல்வம், இவற்றால் அவர்கள் எடுக்கும் கூடுதல் மதிப்பெண்கள் ஆகியன இயல்பாகவே அவர்களுக்கு ஓர் உயர்நிலையினைப் பெற்றுத் தந்துவிடுகின்றன.

இதனால், இந்த வளமான மாணவர்களே பெரிதும் அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ள குறைந்த கட்டண இடங்களையும் அள்ளிக்கொள்கின்றனர்.

தங்களது திறமை, விடாமுயற்சி, ஈடுபாடு, ஆர்வம், எதிர்கால நம்பிக்கை போன்ற தகுதிகளால் நுழைவுத் தேர்வில் நல்ல மதிப்பெண்களை ஒருசிலர் பெற்றாலும், சமூகத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள் தனியார் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைத்தாலும் அவற்றுக்கான கல்விக் கட்டணம், தங்கும் விடுதிச் செலவுகள் போன்றவற்றைச் செலுத்த இயலாததால் வாய்ப்புகளை இழக்கின்றனர்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் 85% இடங்கள் நுழைவுத் தேர்வு மதிப்பெண்கள் வழியாகவே இட ஒதுக்கீடு அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. எஞ்சியுள்ள 15% இடங்கள் அனைத்திந்திய அளவிலான ஒதுக்கீடு என்று தட்டிப் பறிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டு மக்களின் வரிப் பணத்தில் தமிழ்நாடு அரசின் முழு உதவியோடு நடத்தப்படுகின்ற அரசு மருத்துவக் கல்லூரிகளில் அனைத்திந்திய இட ஒதுக்கீடு

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 07

## "அடிக்காதீங்க, அண்ணா!"

பெண்கள் மீதான பாலியல் சீண்டல்களும் பாலியல் வன்முறைத் தாக்குதல்களும் காலம் காலமாக நடந்து வருகின்றன.

குறிப்பாக நிர்க்கதியான பெண்கள், ஏதேனும் ஒரு வகையில் தனது உதவியை நாடும் நிலையில் இருக்கிற பெண்களை, தமது வலையில் வீழ்த்தி பாலியல் ரீதியாகச் சுரண்டுவதில் மிக உயர்ந்த பொறுப்புகளில் இருப்பவர்களும் ஈடுபடுகின்றனர்.

ஐபிஎஸ், ஐஏஎஸ் அதிகாரிகள், நீதிபதிகள் போன்ற பொறுப்பான பதவிகளை வகிப்பவர்கள், அதிகாரம் செலுத்தும் நிலையில் இருப்பவர்கள் என ஏராளமானோர் இத்தகைய பாலியல் வேட்டைகளை இயல்பாகச் செய்கிறார்கள்.

இது வெளியில் தெரியாது, தெரிந்தாலும் தனக்கு பாதிப்பு வந்துவிடாது என்ற அதிகார மமதைதான் இதற்கு அடிப்படையாக இருக்கிறது. உயர் அதிகாரம் படைத்தோர் இத்தகைய வல்லுறவுகளில் ஈடுபடும்போது, சமூகம் கைகட்டி நிற்கிறது. பாதிக்கப்பட்ட பெண்களின் மீதே குற்றம் சாட்டுகிறது!

பாதிக்கப்பட்ட பெண்கள், வெளியில் சொன்னால் வாழ்க்கை போய்விடும் என்று வாயடைக்கப்படுகிறார்கள். அதையும் தாண்டி நீதியைத் தேடி அலையும் பெண்களுக்கு, அதற்கான ஒவ்வொரு கதவும் இழுத்துச் சாத்தப்படுகிறது!

பொள்ளாச்சியில் நடைபெற்ற கூட்டு பாலியல் வழக்கு, பாலியல் கொடுமைகளில் புதிய உச்சமாகும்.

தனி மாளிகை கட்டியமைத்து, பெண்களை நம்பிக்கைத் துரோகம் செய்து, காதலிப்பதாக நடித்து, மாளிகைக்கு வரவழைத்து, அடித்துத் துன்புறுத்தி, மிரட்டி கூட்டமாய் அந்த ஓநாய்கள் சேர்ந்து வேட்டையாடியது மட்டும் இல்லாமல், அதனை வீடியோ எடுத்து, வாட்ஸ்அப் குழுவில் பகிர்ந்து, தொடர்ந்து பணம் பறிப்பதற்கும், விரும்பும் போதெல்லாம் இச்சையை நிறைவு செய்ய அழைப்பதற்கும் பயன்படுத்தி வந்தது எண்ணிப் பார்க்க முடியாத கொடூரச் செய்கையாகும்.

"அடிக்காதீங்க அண்ணா, வலிக்கிறது" என்றும் "உன்னையை நம்பித்தானே வந்தேன்" என்றும் அந்தப் பெண்கள் அழுது அகற்றுகிற கூக்குரல் எந்தக் கடின மனத்தையும் அசைத்து உலுக்கிவிடும். பல்வேறு அச்சுறுத்தல்களையும் தாண்டி இதனை வெளிக்கொண்டு வந்த 'நக்கீரன்' இதழ் பாராட்டுக்குரியது.

2016 முதல் 2018 வரை தொடர்ச்சியாக இந்த வன்கொடுமை நடந்து கொண்டே இருந்திருக்கிறது.

2019 பிப்ரவரியில், ஒரு கல்லூரி மாணவி துணிச்சலாக இதை காவல்துறையிடம் புகார் செய்ததால், இது வெளிச்சத்துக்கு வந்தது.

புகாரை பதிய மறுத்ததில் தொடங்கி, ஒவ்வொரு கட்டத்திலும் இதை ஒன்றுமில்லாமல் செய்துவிட, அன்றைய அதிமுக அரசு முயற்சித்தது. சட்ட நியதிகளுக்கு முரணாக, புகார் கொடுத்த பெண்ணின் பெயர் முகவரி உறவினர்கள் பெயர் அனைத்தையும் போலீஸ் அதிகாரி பாண்டியராஜன் பத்திரிகையாளர் பேட்டியில் வெளிப்படுத்தினார். இது தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணையிலும் விவரங்கள் இருந்தன.

இனிமேல் யாராவது புகார் கொடுக்க வந்தால், உங்களுக்கும் இந்த கதிதான் என்பதற்கான எச்சரிக்கை அது.

அப்போது இதை கண்டித்து அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. பாரதிய ஜனதா கட்சி, அண்ணா திமுக நீங்கலாக, இந்திய மாதர் தேசிய சம்மேளனம் உள்ளிட்ட மாதர் அமைப்புகள், அனைத்து அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாக களத்தில் குதித்தன.

பொதுமக்கள் எழுச்சியினால், இந்த வழக்கில் அதிமுக அரசு முட்டுக் கொடுக்க முடியவில்லை. முதலில் சிபிசிஐடிக்கும், பிறகு சிபிஐக்கும் வழக்கு மாற்றப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களில், எட்டு பெண்கள் சாட்சியம் அளித்தார்கள். அவர்களைப் பற்றிய விவரங்கள் கடைசிவரை வெளிவராமல் பாதுகாக்கப்பட்டதற்காக மத்திய புலனாய்வுத் துறை அதிகாரிகளை பாராட்டியாக வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இதனை புகார் செய்யத் துணிந்த கல்லூரி மாணவியும், அவரது குடும்பமும் போற்றுதலுக்குரியவை. அவர் மட்டும் உறுதியோடு நின்றிருக்காவிட்டால், வழக்கு பிசுபிசுத்திருக்கும்.

இந்தக் காமுக ஓநாய்களுக்காக நாங்கள் நீதிமன்றத்தின் முன்பு ஆஜராக மாட்டோம் என வழக்கறிஞர்கள் முடிவு செய்ததும் பாராட்டுதலுக்கு உரியது.

கோவை சிறப்புப் பெண்கள் நீதிமன்றம், 9 குற்றவாளிகளுக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை வழங்கி உள்ளது. பாதிக்கப்பட்ட எட்டு பெண்களுக்கும் 85 லட்ச ரூபாய் நிவாரணத் தொகை பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதனோடு சேர்த்து மேலும் 25 லட்ச ரூபாய் ஒவ்வொருவருக்கும் கூடுதலாக தருவதாக தமிழ்நாடு அரசு உத்தரவிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

மிக அதிக எண்ணிக்கையில் பெண்கள் வேலைக்கு செல்லும் மாநிலம் தமிழ்நாடு. அவர்கள் பணிக்கு வரும்போதும் திரும்பிச் செல்லும் போதும் பாதுகாப்பு தர வேண்டியது வேலையளிப்பவரின் சட்டபூர்வ கடமை. இது ஏட்டளவில் உள்ளது. தமிழ்நாடு அரசு இதிலும் தனிக் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது.

# இலக்கியப் பேராசான் ஜீவாவின் பத்திரிகைப் பயணம்

தலைமுறை கடந்து நம்மோடு புழங்கிக் கொண்டிருக்கும் ஒன்றின் தொடக்கத்தைப் பற்றி நாம் அறிகின்ற போது ஆச்சரியமாகவும் வியப்பாகவும் இருக்கும். 1937 ஆம் ஆண்டு தொழிலாளர்களைப் பற்றிப் பேசவும் அவர்களின் பிரச்சனைகளை அரசிடம் கொண்டு செல்லவும் தொழிலாளர் பத்திரிகை வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் இலக்கியப் பேராசான் தோழர் ஜீவானந்தம் நினைத்தார்.

நினைப்பு நல்லதாக இருந்தாலும் அதற்கு நிதி ஆதாரம் தேவை என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். நிதி சேகரிப்பதற்காக கோவை மாவட்ட தோழர்களிடம் சென்று நாள் முழுதும் நிதிகளைச் சேகரித்தார். நாள் முழுவதும் நகர்ந்து பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. பசியாற்றலாமே என்றால் உடன் வந்த தோழர்.

அதற்குக் காசு வேண்டுமே என்றார் தோழர் ஜீவா.

காலையிலிருந்து சேகரித்த நிதிதான் நம்மிடம் இருக்கிறதே அதில் இருந்து பசியாற்றிக் கொள்வோம் என்றார் உடன் வந்த தோழர்.



பத்திரிகைக்காகச் சேகரித்த நிதி இதை நம் பசிக்காகச் செலவிடக் கூடாது என்றார் தோழர் ஜீவா.

பசியோடு ரயில் நிலையத்தில் இருந்தனர். உடன் வந்திருந்த தோழர் இப்படி ஒரு நாணயமான மனிதரோடு நாம் பயணிக்கிறோம் என்று பெருமை கொண்டார். சிறிது நேரம் கழித்து ரயில் நிலையத்திற்கு வந்த மற்றொரு தோழர் நிலைமையை உணர்ந்து, உணவு வாங்கிக் கொடுத்து ஊருக்கு அனுப்பினார்.

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. எனவே பத்திரிகை நடத்தும் அனுமதி எளிதாகக் கிடைத்து விடும் என்று ஜீவா நினைத்தார். ஆனால் அவருக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. இருந்தாலும் ஜீவா பத்திரிகை தொடங்கும் வேலையில் பின் வாங்கவில்லை.

அப்போது காகிதத்தின் விலை தோழர் ஜீவாவின் பொருளாதாரத்திற்குச் சாதகமாக இருந்தால் 3 இதழ்களுக்கான காகிதங்கள் வாங்கினார்.

அச்சிடுவதற்கான கூலியும் கையில் இருந்ததால் அச்சகங்களைத் தேடத் தொடங்கினார். பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஒரு வழியாக பி.எஸ்.பிரஸ் என்கின்ற அச்சகத்தின் உரிமையாளர் பத்திரிகையை அச்சிட்டுத் தருவதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

இதற்கிடையில் பத்திரிகை நடத்துவதற்கு மாகாண மாஜிஸ்திரேட் 500 ரூபாய் ஜாமீனாகச் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டார். இதற்கு மேல் பணத்துக்கு எங்கே போவது என்ற கவலை ஜீவாவைச் சூழ்ந்திருந்தாலும் தன்னுடைய முயற்சியைத் தொடர்ந்தார். மீண்டும் தோழர்களிடம் நிதி கேட்டுப் பணத்தைச் சேகரித்தார்.

நீதிமன்றத்தில் செலுத்தி அனுமதி பெற்றார். இத்தனை சோதனைகளுக்குப் பிறகு 1937 நவம்பர் 6ஆம் நாள் தமிழர்கள் கரங்களில் தொழிலாளர்களின் பத்திரிகையான ஜனசக்தி தவழ ஆரம்பித்தது. ஜனசக்தி பத்திரிகைக்கு ஜீவா ஆசிரியராகச் செயல்படத் தொடங்கினார். தொழிலாளர்களும் பத்திரிகையை ஆர்வத்தோடு வாங்கிப் படிக்கத் தொடங்கினார்.

தொடக்கக் காலத்தில் பி.ராமமூர்த்தி, முருகேசன், ஏ.எஸ்.கே ஆகியோர் ஜனசக்திக்கு உறுதுணையாக இருந்தனர். இவர்களின் மதியச் சாப்பாடு உணவகத்தில் இருந்து ஒரு எடுப்பு சாப்பாடு வரும். அதைப் பங்கிட்டுக் கொள்வார்கள்.

யாராவது வேலை நிமித்தமாக வெளியே சென்றால் பங்கிடுவது குறைந்து உணவு சற்று கூடுதலாக கிடைக்கும். யாராவது கூடுதலாக வந்துவிட்டால் எண்ணிக்கை கூடி உணவும் குறையும். இப்படியான சிரமங்களை எல்லாம் சந்தித்தனர்.

ஜனசக்தியில் வெளியாகும் கட்டுரைகள் மக்கள் மத்தியில் எந்த அளவுக்கு வரவேற்பு பெற்றதோ.

அந்த அளவு ஆட்சியாளர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. அச்சகங்களும் கடுமையான மிரட்டல்களைச் சந்திக்க வேண்டி இருந்ததால் பத்திரிகை அச்சிட்டுத் தருவதிலிருந்து ஒதுங்கியது.

வாரப் பத்திரிகையாக வந்து கொண்டிருந்த ஜனசக்தி வெளி வருவது உத்தரவாதம் அற்ற நிலை உருவானது.

பத்திரிகை நின்று போவதை விரும்பாத ஜீவா தோழர்களோடு கலந்து ஆலோசித்துச் சொந்தமாக அச்சகத்தை உருவாக்க வேண்டிய நிலையை உணர்த்தி அதற்கான நிதிகளைச் சேகரிக்கும் பணியில் இறங்கினார்.

கிடைத்த நிதியைக் கொண்டு ஜனசக்தி பத்திரிகைக்காகத் தனி அச்சகத்தை உருவாக்க நினைத்தார்.

ஜனசக்தி பத்திரிகைக்காக அச்சக அனுமதி கேட்டால் இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கும் வெள்ளை அரசிடம் இருந்து நிச்சயமாக அனுமதி கிடைக்காது என்பதைத் தன்னுடைய அனுபவத்தின் மூலம் உணர்ந்த ஜீவா, ஜீவா பெயரில் ஜனசக்தி அச்சகம், ராமமூர்த்தி பெயரில் சோசலிஸ்ட் அச்சகம், அடையாளம் தெரியாத ஒருவரின் பெயரில் ஜேசு அச்சகம் என மூன்று உரிமங்களை அரசிடம் கேட்டார். ஜேசு அர்ச்சகத்துக்கு உரிமம் கிடைத்தது. ஜேசு அச்சகத்தின் மூலம் 1938 ஏப்ரல் 6 அன்று சோஷலிஸ்ட் வாரப்பத்திரிகை என்ற முத்திரையோடு மீண்டும் ஜனசக்தி வெளிவரத் தொடங்கியது.

வார பத்திரிகையாக இருப்பதைத் தினசரி நாளிதழாகக் கொண்டு வர ஜீவா முயற்சித்தார்.

அப்போது தன் நாடக நண்பர்களான டி.கே. சண்முகம் சகோதரர்கள் நினைவுக்கு வந்தனர்.

திண்டுக்கல்லில் நாடகம் நடத்திக்கொண்டிருந்த டி.கே.சண்முகம் சகோதரர்களிடம் சென்று விசயத்தைச் சொன்னார். பாசத்தோடு வரவேற்று ஜனசக்தி பத்திரிகைக்காக ஒரு நாடகத்தை நடத்திக் கேட்ட நிதியைத் தர முயன்றார்கள்.

ஆனால் அன்று அவர்கள் நினைத்தபடி நாடகம் வசூல் ஆகவில்லை. இருந்தாலும் அவர்களிடம் 5000 ரூபாய் கடனாகப் பெற்று சென்னை திரும்பினார்.

அப்போது இந்தியாவில் அந்நிய ஆட்சி நடந்து கொண்டிருந்ததால் நாடு முழுவதும் கம்யூனிஸ்டுகள் விரட்டி விரட்டிக் கைது செய்யப்பட்டுக் கொண்டிருந்தனர். 5000 ரூபாய் பணத்துடன் சென்னை வந்து இறங்கிய ஜீவாவை உடனடியாகக் கைது செய்தது காவல்துறை. ஜனசக்தியின் தினசரி கனவு அந்த இடத்திலேயே கலைந்தது.

லட்சியப் பயணத்தில் தடைகள் படிக்கட்டுகளாக மாறிவிடும் என்பது காலத்தால் எழுதப்பட்ட வரலாறு. அந்த வரலாறு உண்மை என்பதற்கு உதாரணமாக ஜீவாவின் வழித்தோழர்களால் காகிதத்தில் ஓர் ஆயுதம் என்ற சொல்லாடலோடு தொழிலாளர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஜனசக்தி பத்திரிகை தவழ்ந்து கொண்டிருக்கிறது.

– த.மு.சிவகுமார்

# கொடிகாத்த குமரன் நகரில் நம் குமரனை இழந்தோம்



இரா.முத்தரசன்

**கொடிகாத்த குமரன் நகரமான திருப்பூர் மாநகரில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு, மாநிலக் குழு கூட்டங்கள் 2025 மே 6 மற்றும் 7 ஆகிய இரு தினங்கள் நடைபெற்றன.**

நகரின் பல்வேறு இடங்களில் கூட்ட அறிவிப்பு விளம்பரத் தட்டிகள் ஆங்காங்கே பல வண்ணமயமாக வைக்கப்பட்டிருந்தன.

செங்கொடிகளாலும், செந்தோரணங் களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

எம்.கே.எம்.ரிச் விடுதி கூட்ட அரங்கில், தோழர் எம்.ரவி தலைமையில் முதல் நாள் நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசியல் நிலை, மாவட்ட மாநாடுகள், மாநில மாநாடு, மாநாட்டுப் பேரணி, மக்கள் தொண்டரணியின் அணிவகுப்பு, கட்சி உறுப்பினர் பரிசீலனை, மாவட்ட, மாநில மாநாடுகளுக்குரிய பிரதி நிதித் தேர்வுகள் குறித்து என நிகழ்ச்சி நிரல்க்ள் அனைத்தும் விவாதிக்கப் பெற்று நிறைவேற்றுவதற்குரிய திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

அடுத்த நாள் ஆகஸ்ட் 7ஆம் நாள் காலை சரியாக 10 மணிக்குக் கூட்டம் தொடங்கியது.

பகல்காம் சுற்றுலா மையத்தில் ஏப்ரல் 22 ஆம் நாள் பயங்கரவாதிகள் நடத்திய கோழைத்தனமான, கொடூரமான துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான 26 பேர்கள் உட்பட பலருக்கும் அஞ்சலி செலுத்திய பின்னர், தேசியச் செயலாளர் தோழர் டாக்டர் கே.நாராயணா தேசியக் குழு முடிவுகள் மற்றும் இந்திய இராணுவம், பாகிஸ்தான் பயங்கரவாத முகாம்களில் நடத்திய துல்லிய தாக்குதல் குறித்தும், பஞ்சாப் மாநிலம் சண்டிகரில் செப்டம்பரில் நடைபெற உள்ள கட்சியின் அகில மாநாட்டிற்கான தயாரிப்புகள் குறித்தும் விளக்கவுரை அளித்துப் பேசினார்.

காலை அமர்வு பகல் ஒரு மணியுடன் நிறைவுற்று மதிய உணவு இடைவேளை அறிவிக்கப்பட்டு, தோழர்கள் மதிய உணவு உட்கொண்டு அடுத்த அமர்வுக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

தலையில் இடி விழுந்தது போன்று, தாங்கிக் கொள்ள முடியாத பேரதிர்ச்சியான துயரச் செய்தியைக் கூறினார்கள்.

தமிழ்க்குமரன் உடல்நலமின்றி மருத்துவமனைக்கு மருத்துவர்கள் ஜி.ஆர்.ரவீந்திரநாத், அறம், சாந்தி மற்றும் மாநகரச் செயலாளர் ரவி ஆகியோர் அழைத்துச் சென்றனர் என்றும், சோதித்த மருத்துவர்கள் கையை விரித்து விட்டார்கள் என்றும் தோழர்கள் கூறினார்கள்.

மாநிலக் குழு உறுப்பினர்களில் பெரும்பாலோர் மருத்துவமனைக்கு விரைந்தனர்.

அங்கே கண்ட துயரக் காட்சி நெஞ்சை விட்டு அகல மறுக்கின்றது.

நடைபெற்ற மாநிலக் குழு கூட்டத்தில் கம்பீரமாகக் கலந்து கொண்ட தமிழ்க்குமரன், தனது பயணத்தை முடித்துக் கொண்ட நிலையில் அமைதியாகப் படுக்கையில் இருந்தார்.

சென்றவர்கள் எல்லோரும் டாக்டர் கே. நாராயணா உட்பட கண்ணீர் மல்க அஞ் சலி செலுத்தினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தர்மபுரி மாவட்ட துணைச் செயலாளராகவும், மாநிலக் குழு உறுப்பினராகவும் சிறப்பாகப் பணியாற்றிய இளம் தோழர்.

மே எட்டாம் நாள் அவருடைய பிறந்த நாளாகும். பிறந்தநாள் கொண்டாடுவதற்கு மாறாக, அதன் முதல் நாளே பயணத்தை முடித்துக் கொண்டார்.

தர்மபுரி மாவட்டம் அரூர் அருகில் உள்ள நாகன் கொட்டாய் பகுதியில் சிட்டு, காந்தி தம்பதியரின் அன்பு மகனாகப் பிறந்து, வளர்ந்து உள்ளூரில் தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிப் படிப்பை நிறைவு செய்து, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ பயின்று தேர்வானார்.

கல்லூரி மாணவராக இருந்தபோது, அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றிய அற்புதமான தோழர்.

கல்லூரிப் படிப்பை முடித்து சட்டக் கல்லூரியில் சேர்ந்து அதிலும் தேர்வானார்.

நவநீதம் என்ற நல்லாளை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு, வாழ்க்கையைத் தொடங்கிய நல் தம்பதியருக்குக் கவிநிலவு என்ற மகளும், ஸ்டாலின் என்ற மகனும் உள்ளனர்.

நல்ல தாய்மொழி பற்றுடையவரான குமரன், தனது தாய், தந்தை இருவரின் முன்னெழுத்துகளைக் குறிக்கும் விதமாக கா.சி.தமிழ்க்குமரன் திகழ்ந்தார்.

தனக்கான ஒரு சிறிய வீட்டை 2010 ஆம் ஆண்டில் கட்டியுள்ளார். அவ்வீட்டிற்கு "செம்மொழி குடில்" எனப் பெயர் சூட்டியுள்ளார்.

மகளுக்கு அழகான தமிழில் கவி நிலவு எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தவர், மகனுக்குப் புரட்சியாளர் ஸ்டாலின் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்துள்ளார்.

மனைவி நன்கு படித்த சகோதரியாவார். தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரியில் கண்காணிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டுள்ளார். அவரது வருமானமே குடும்பத்தை நடத்திச் செல்ல வழி வகுத்துள்ளது.

கணவனும், மனைவியும் சேர்ந்து தங்களது இரு பிள்ளைகளையும் நன்கு படிக்க வைத்து மருத்துவர்களாக ஆக்க வேண்டும் என்கிற லட்சியக் கனவோடு இருவரையும் மருத்துவர்களாகப் படிக்க வைத்துள்ளனர்.

மகள் கவி நிலவு உஸ்பெகிஸ்தான் நாட்டில் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து நான்காம் ஆண்டில் படித்து வருகின்றார்.

மகன் ஸ்டாலின் சேலத்தில் உள்ள மோகன் குமாரமங்களம் மருத்துவக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மருத்துவராகப் பயின்று வருகிறார்.

இரு பிள்ளைகளும் படித்து மருத்துவராக வரவேண்டும், அவர்களுக்குத் திருமணங்கள் செய்து முடிக்க வேண்டிய பல கடமைகள் அனைத்தையும், அன்பு மனைவி யிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளார்.

தர்மபுரி மாவட்ட தோழர்களோடு சேர்ந்து புன்சிரிப்பு பொங்க கூட்டத்திற்கு வந்தவர், தன் உடலைச் சுமந்து செல்லுங்கள் எனக் கட்டளையிட்டு விட்டு அமைதியாகிவிட்டார்.

கட்சியில்ஒருதுணைச் செயலாளர் எப்படி இருக்க வேண்டும், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்குரிய நல்ல எடுத்துக்காட்டுடன் செயலாற்றினார்.

அண்மையில் தர்மபுரியில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநில மாநாடு மிக வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது.

அம்மாநாட்டுப் பணிகளில் மாவட்டச் செயலாளர் கலைச்செல்வனுடன் இணைந்து பணியாற்றியதை நித்தம், நித்தம் காண முடிந்தது.

தோழர்களுடன் இணைந்து சிப்பாயாக நாள்தோறும் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

தர்மபுரியில் இருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அரூருக்கு எந்நேரமும் சென்று வர பேருந்து வசதி உண்டு.

ஆனால் கடமையே கண்ணாயிரம் ஆக இருந்துட்ட குமரன் வீட்டிற்குச் செல்ல வேண்டும், தாய், தந்தை மனைவியைப் பார்க்க வேண்டும் என்பது குறித்துச் சிறிதும் கவனம் செலுத்தாமல், மாநாட்டுப் பணிகளில் முழுக் கவனம் செலுத்தி வந்தார்.

பலரும் அமர்ந்து பல்வேறு பிரச்சனைகள் குறித்து மயிர் பிளக்கும் வாதங்களை மேற்கொண்டு இருந்தாலும், அவர்களோடு அமர்ந்திருக்கும் குமரன் புன்னகை தவழ்ந்த நிலையில் இருப்பார். வாய் திறந்து பேச மாட்டார்.

ஆனால் செயலில் கவனமாக இருப்பார். நல்ல படிப்பு, வழக்கறிஞர், கட்சியில் பொறுப்புக்கள் எனப் பல சிறப்புகளைக் கொண்ட போதும், தன்னடக்கத்தின் அடையாளமாகத் திகழ்ந்து வந்தார்.

தன்னை முதன்மைப்படுத்திக் கொள்ள வேண்டும், தான் ஒரு முக்கியமான நபர் போன்ற கருத்தை உருவாக்கிட வேண்டும் என்ற இழ்நிலைகளை எப்போதும் அவரிடத்தில் கண்டதில்லை.

தன் குடும்பச் சூழல், பிள்ளைகள் படிப்பு அதற்குரிய செலவுகள், தாய், தந்தை பராமரிப்புக்கான எவ்வளவோ அவருக்குப் பொருளாதார நெருக்கடிகள் நிரம்பி இருந்திருக்க வேண்டும் என்பது அவரது மரணத்திற்குப் பின்னர் நம்மால் உணர முடிகின்றது.

எந்தச் சூழலிலும் அவரது குடும்பம் குறித்தும், குடும்ப நெருக்கடிகள் குறித்தும் எவரிடத்திலும் பகிர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.



அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து, படித்து பட்டம் பெற்று நல்ல பிள்ளையாக தாய் தந்தையருக்கும், நல்ல கணவனாக மனைவிக்கும், நல்ல தந்தையாக பிள்ளைகளுக்கும், நல்ல தொண்டனாக கட்சிக்கும், நல்ல சமூக சேவகனாக ஊர் பொதுமக்களுக்கும் விளங்கிய நல்முத்தாக விளங்கிய குமரன், தன் இளம் வயதில் எல்லோரையும் கதற விட்டு அவர் அமைதியாகிவிட்டார்.

குமரா, தமிழ்க்குமாரா! நீ மரணிக்கவில்லை! நீ என்றென்றும் எங்களோடு பயணிப்பாய்.

நீ ஏற்றுக்கொண்ட லட்சியம் மகத்தானது, மகோன்னதமானது. அத்தகைய லட்சியம் வெற்றி பெற வேண்டும் என இரவு பகலாய்ப் பாடுபட்டாய்!

மாணவனாக கல்லூரி பயின்றபோது மாணவர் பெருமன்ற கொடியை உயர்த்திப் பிடித்தாய்!

கல்லூரி முடித்து ஊர் திரும்பிய பின்னர் இளைஞர் பெருமன்ற கொடியை உயர்த்திப் பிடித்தாய்!

கட்சியில் சேர்ந்து உறுப்பினராகி செங்கொடியை உயர்த்திப் பிடித்தாய்!

அந்தக் கொடி ஒருபோதும் தாழக் கூடாது, என்றென்றும் கம்பீரமாக உயர்ந்து, பட்டொலி வீசிப் பறக்க வேண்டுமென உயிர்த் துடிப்பாய் பணியாற்றினாய்!

நீ உயர்த்திப் பிடித்த செங்கொடி, உனக்காக ஏழாம் தேதி தாழப்பறந்தது, உயரப் பறக்க மறுத்து அரைக்கம்பத்தில் பறந்தது.

நீ உணர்வு பூர்வமாக நேசித்த சிவப்பு ஆடை உன் மேனியை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

உன்னை 10 மாதம் சுமந்து பெற்று வளர்த்த தாய் காந்தி அம்மையார் தன் தலையில் அடித்துக் கொண்டு கதறி, கதறி அழுது, என் மகன் எங்கே? என் மகன் எங்கே? எனக் கதறி அழும் சத்தம் உன் காதுகளில் விழப்போவது இல்லை.

உன்னை ஆளாக்கி அழகு பார்த்த உன் தந்தை சிட்டு, கண் அறுவை சிகிச்சை செய்து கொண்டு கதறி அழ முடியாத துயரத்தில் ஆழ்ந்து போய் உள்ளார்.

உன் மனைவி நவநீதம் குறித்துச் சொல்ல வேண்டியது இல்லை. கதறிக் கதறி அழுகின்றார். என்னை விட்டுவிட்டுப் போய் விட்டீர்களே எனக் கதறுகின்றார். நான் என்ன செய்யப் போகிறேன் என்று விசும்புகிறார். செய்வதறியாது தேம்பித் தேம்பி அழுகின்றார்.

உன் மகன் ஸ்டாலின் உன்னை விட அதிகமாக மௌனம் காக்கின்றான். அவன் குனிந்த தலை நிமிராது, தனது மௌனத்தால் வந்த அனைவரையும் அழ வைத்தான்.

மகள்செய்தி அறிந்து உஸ்பெகிஸ்தானில் இருந்து விமானம் பிடித்து டெல்லி வந்து, அங்கிருந்து பெங்களூர் பயணம் செய்து, அங்கிருந்து கார் மூலம் இரவு 12 மணிக்கு வந்து உன் உடலைப் பார்த்து அப்பா, அப்பா என்று கதறிக் கொண்டுள்ளார்.

குடும்ப உறுப்பினர்கள் மட்டுமல்ல, கட்சித் தோழர்கள் அனைவரும் மட்டுமல்ல, ஊர்ப் பொதுமக்கள், கட்சி வித்தியாசமின்றி அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள், தொண்டர்கள் அனைவரும்...... மாலைகளை உன் உடல் வைக்கப்பட்டுள்ள பெட்டியின் மீது வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். உன் மனைவி நவநீதம் குறிப்பிட்டதைப் போல், ஊரில் உள்ள மாலைகள் எல்லாம் உன் உடல் நோக்கி வந்து கொண்டே இருந்தன.

குமரா, தமிழ்க்குமாரா, நீ மரணமடையவில்லை. வாழ்கிறாய்! என்றென்றும் எங்களோடு வாழ்வாய்! வாழ்ந்து கொண்டே இருப்பாய்!

நீ எத்தகைய உயரிய லட்சியத்திற்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டாயோ, அத்தகைய லட்சியம் ஈடேற, வெற்றி பெற உன் பேரால் சபதமேற்போம்!

குமரா! தமிழ்க்குமாரா!! நீ வாழ்க! நின் புகழ் ஓங்குக!!

## 26வது மாநில மாநாட்டை நோக்கி... 2

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட முதல் செயலாளர்



ப.பரமசிவம்

**சுதந்திரப் போராட்ட வீரரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட முதல் செயலாளர் கே.செல்வராஜ் அவர்களின் போராட்ட வரலாறு.**

தோழர்.கே.செல்வராஜ் சேலத்தின் ஒன்றுபட்ட மாவட்டமான நாமக்கல் ஒடுவம்பட்டியில் 30.08.1916ல் கண்ணையா நாயுடு நாமகிரி அம்மாளுக்கு செல்வ செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்தார். உடன் பிறந்தவர்கள் 16 பேர்களில் இவர்தான் மூத்த மகன். இவரது குடும்பம் தேசபக்திமிக்க குடும்பமாகும்.

பள்ளியில் மாணவப் பருவத்தில் ஏற்காட்டில் மான்போர்டு மெட்ரிகுலேசன் படித்தவர் 14 வயதில் AMIE என்கிற மெக்கானிக்கல் என்ஜினீரிங் பட்டப்படிப்பைப் படிக்க பம்பாய் சென்றார். அங்கு திலகரின் தீவிரவாதப் போராட்டங்களையும், காந்தியை வார்தா சென்று சந்தித்ததிலும் டாக்டர் அம்பேத்கர். டாக்டர் ஜின்னா போன்றோரின் உறையைக் கேட்டும், பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்டங்களைக் கண்டதிலும் புத்துணர்வு பெற்றார்.

பின்னர் மின் பொறிஞர் (AMIE) பட்டபடிப்பை முடித்து பாபநாசத்தில் இளநிலைப் பொறியாளராகப் பொறுப்பேற்றுப் பணியில் சேர்ந்தார். இவர் பணி காலத்தில் அங்கிருந்த தொழிலாளர்கள் மிகக் குறைந்த கூலிக்கு மலை முகடுகளில் சாலை போடவும் மின் கம்பங்கள் இணைக்கவும் இரவு பகலாகப் பணியாற்றியதில் அங்கிருந்த விவசாயிகள் கொசுக்களுக்குப் பலியாகி வயிறு வீங்கியும் யானைக் கால் நோயிற்கு ஆட்பட்டும் பலியாவதைக் கண்ட இவர் அவர்களுக்காகப் போராடியதின் விளைவாய் வெள்ளை துரை அதிகாரிகளால் வேலை நீக்கப்பட்டார்.


அதன் பிறகு விக்ரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் ஹார்வி மில் தொழிலாளர்களுக்குச் சங்கம் அமைத்து அவர்களைத் திரட்டிப் போராடத் தொடங்கியுள்ளார். அங்கும் ஆலை அதிபர்கள் இவரை பிடிவாரண்டுடன் கைது செய்ய முயன்றதில் தலைமறைவாகிவிட்டார்.

இவர் நெல்லையில் தலைமறைவாக வாழ்ந்த போது கேரளம் புன்னப்புரா வயலாறு போராட்ட வீரரும் சிறந்த மார்க்சிய அறிஞருமான ராமச்சந்திர நெடுங்காடி என்பவரைச் சந்தித்துள்ளார். அவரிடம் மார்க்சியக் கல்வி பயின்றுள்ளார். அந்நேரத்தில் தேடிக் கொண்டிருந்த சி.ஐ.டி. பாண்டியனிடம் அகபட்டுக் கொண்டார். 8 மாதம் சிறையில் தள்ளப்பட்டுள்ளார். இவரோடு சிறையிலிருந்த காங்சிரசார் பலரை கம்யூனிஸ்ட் ஆக்கியுள்ளார். குறிப்பிடத்தக்கவர்கள் அனந்தகிருஷ்ணன் தூக்கு மேடை மீனாட்சிநாதன், நல்லசிவம் ஆகியோர்கள் விடுதலையான பின் சென்னையில் பி.ராமமூர்த்தி சீனிவாசராவ், ஜீவா, ஏஎஸ்கே ஆகிய தலைவர்களைச் சந்தித்து 193960 கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்துள்ளார்கள். அதன் பிறகு சேலம் வந்திருக்கிறார்.


சேலதிற்கு வந்ததும் சாதாரண சொந்தமாக நெசவுநெய்யும் நெசவாளர்கள் நூல் கிடைக்காமல் திண்டாடுவதைக் கண்டார். வேலை இல்லை சாப்பிட உணவில்லை இனி சாவதைத் தவிர வேறு வழி இல்லை என அறிந்த கைத்தறியாளர்கள் பல்லாயிரக்கணக்கில் வெளிமாநிலங்களுக்குச் செல்லத் தொடங்கினர். இதைக் கண்ட தோழர் கே.செல்வராஜ் நெசவாளர்களை ஒன்று திரட்டினார். கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து ரேஷன் முறையை அமல்படுத்து என கோஷமிடத் தொடங்கினார்.

1940ல், 41 கைத்தறியாளர்களுக்கும் போலீசுக்கும் பலநாள் மோதல் ஏற்பட்டது. இறுதியில் நெசவாளர் சங்கம் அமைத்து ரேஷன் முறையும் அமல்படுத்தச் செய்ய வைத்தார். உடன் இருந்து செயல்பட்டவர்கள் சேலம் குகை தோழர் கே.எஸ். உத்தமலிங்கம், கதிர்ராசு, கருங்கல்பட்டி ராமதாஸ், தாதகாபட்டி பெருமாள் முத்து ராமசாமி, அம்மாபேட்டை வி.வடிவேல்.

அடுத்து மில் தொழிலாளர்களின் அவலநிலையைப் பார்த்து அத்த கூலிகளாக இருப்பதைக் கவனித்த தோழர் கே.எஸ்.சேலம் ஜவஹாமில் ராஜேந்திராமில் புள்ளிகார்மில் மேட்டூர்ப் பகுதிக்குச் சென்று சங்க அமைப்பை ஏற்படுத்திச் சம்பள உயர்வு கோரி 80 நாட்கள் வேலை நிறுத்தம் நடந்தது. இதன் விளைவாக தமிழக முழுதும் போராட்டம் வெடித்தது. அன்றைய நீதிபதி வெங்கட்ராமையா ஒரு தொழிலாளிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.26 பஞ்சபடியும் 26.ரூ சம்பளமும் ஆக மொத்தம் ரூ.52/ வழங்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கினார். இது பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். இவருக்குத் துணைபுரிந்தவர்கள் பஞ்சாலைத்











தொழிலாளர்கள் பக்ரூதின், சுப்புரூ மாரப்பக் கவுண்டர் ஆகியோர். அந்தக் காலகட்டத்தில் சேலத்தில் சுண்ணாம்பு கரடு என அழைக்கப்பட்ட சுரங்க ஆலைகள் (மேக்னசைட்) இரண்டு செயல்பட்டன. 40 கிராமங்களைச் சார்ந்த வி.ச கூலித் தொழிலாளிகள் பல்லாயிரக்கணக்கில் ஆண், பெண் தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தார்கள். அனைவரும் காண்ட்ராக்ட் தொழிலாளர்களாக நடத்தப்பட்டனர். ஆணுக்கு 3 அணா முதல் 5 அணா வரை பெண்களுக்கு 2 அணா முதல் 3 அணா வரை கொடுத்து வந்தார்கள். தினக்கூலி இவர்களை மறைமுகமாகச் சந்தித்து சங்கம் அமைத்தார். போராட்டத்தில் இறக்கினார். ஆத்திரமடைந்த ஆங்கில அதிகாரி ஹாராப்கின்ஸ் செல்வராஜைப் பார்த்துத் துப்பாக்கியால் சுட ஒரு குண்டு அவரது கீழ்த் தாடையைத் துளைத்துச் சென்றது. பின்னர் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். அதன் பிறகு எஸ்.எம்.ராமையா, எம்.கல்யாண சுந்தரம் வழிநடத்தினர்.

### நிலமீட்புப் போராட்டம்

சேலம் மாவட்டம் நங்கவள்ளி பகுதியில் பஞ்சத்தால் பலநூறு உழவர்கள் தங்கள் நிலங்களை அடமானம் வைத்தும் வட்டிக்குப் பணம் பெற்றும் அதனைத் திருப்ப முடியாமல் பெரிதும் அவதிபட்டனர். சுமார் 2100 ஏக்கர் நிலங்களைப் பறிகொடுத்த விவசாயிகள் அதனை அபகரித்த சேலத்து செட்டியார்களையும் துணை நின்ற காவலர்களையும் எதிர்க்கத் துணிந்தனர். தோழர் அர்த்தனாரி வாத்தியார் துணையோடு தோழர் கே.எஸ் வழிகாட்டுதலின் பேரில் அங்குள்ள இளைஞர் விவசாயிகளுக்குக் கவண்கல் எறியும் பயிற்சி கொடுத்து எதிரிகளைத் தாக்கத் தயாராக்கினர்.

1948 ஜீலை 15ந் தேதி திடீரென போலீசார் விவசாயிகளைத் தாக்கி நிலத்திலிருந்து வெளியேற்ற முன்னேறுகையில் பயிற்சி பெற்ற 600 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கவண் கற்களால் தாக்கத் தயாராகினர்.

குருசேத்திர போராக மாறிய சோரகை பூமி யுத்த பூமியாக மாறியது. கவண்கல் தாக்குதலைச் சமாளிக்க முடியாத போலீஸ் பட்டாளம் பின் வாங்கியது. பலமணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு காவலரின் துப்பாக்கி தோழர் கே.செல்வராஜுக்குக் குறிவைக்க அவரைக் காப்பாற்ற முனைந்த தோழர் சோரகை பெருமாள் அதனைத் தாங்கி தன் உயிரை ஈந்தார். நீண்ட சமரசப் பேச்சுவார்த்தைக்குப் பின் உடன்பாடு ஏற்பட்டு விவசாயிகளுக்கு நிலம் பிரித்தளிக்கப்பட்டது. அதில் ஒருபங்காக கே.செல்வராஜுக்கு வழங்கப்பட்ட நிலத்தைத் தன் உயிர் காத்த பெருமாள் குடும்பத்திற்கே கொடுத்துவிட்டார்.

### சேலம் சதிவழக்கு

ஏற்கெனவே நெல்லை சதி வழக்கைச் சந்தித்த செல்வராஜுக்கு மீண்டும் சோதனை 1949ல் தொட்டம்பட்டி கல்லாவி (தர்மபுரி) ரயில் நிலையத்திற்கு இடையே சரக்கு ரயில் கவிழ்க்கப்பட்டது. இதைக் கம்யூனிஸ்ட்கள்தான் செய்தார்கள் எனப் பழி சுமத்தி அன்றைய அரசு பி.ராமமூர்த்தி எம்.கல்யாண சுந்தரம் எஸ்.எம்.ராமையா, கே.செல்வராஜ் டாக்டர் தெய்வம் டேப்சடையப்பன் உள்பட 33 பேர்கள் சிறையில் அடைத்தார்கள். பலர் தலைமறைவு. இதில் சிலருக்கு 5 ஆண்டு, சிலருக்கு 7 ஆண்டுகள், சிலருக்கு உச்சபட்சமாக 21 ஆண்டுகள் விதிக்கப்பட்டன. தோழர் கே.செல்வராஜுக்கு 7 ஆண்டுகள் விதிக்கப்பட்டது. பின் 1952ல் அரசியல் சூழ்நிலையில் முதல்வராக இருந்த ராஜாஜி அனைவரையும் விடுதலை செய்துள்ளார்.

கே.செல்வராஜ் சுதந்திரப் போராட்டத்திலும் சுதந்திர நாட்டிலும் பலதரப்புத் தொழிலாளர்களுக்காக பல போராட்டங்களை நடத்தி இந்தியக் கம்யூனிட்ஸ் கட்சிக்கும் முதல் மாவட்டச் செயலாளராக இருந்து செயல்பட்டனர். பல வீர தியாகிகளால் உருவாக்கப்பட்ட சேலம் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் பொறுப்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில மாநாடு நடைபெறுகிறது. அத்துணைபகுதி மக்களும் மாநாடு சிறப்புற நடைபெற ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு: 9442995040

## தியாகிகள் இரணியன், சிவராமன், ஆறுமுகம் 75வது ஆண்டு நினைவேந்தல் உறுதியேற்பு

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் ஜமீன், பண்ணையடிமை, நிலவுடமைக் கொடுமைகளை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்தி, காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் பலியான வாட்டாக்குடி இரணியன், ஜாம்பவானோடை சிவராமன், ஆம்லாப்பட்டு ஆறுமுகம் தியாகிகளின் 75வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி, இடதுசாரிகள் பொதுமேடை சார்பில் தஞ்சாவூர் பழைய பேருந்துநிலையம் எதிரில், மக்கள் அதிகாரம் மாவட்டச் செயலாளர் தேவா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடக்கு மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஆர்.தில்லைவனம், தெற்கு மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வெ.சேவையா, மாநகரக் குழுச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், துரை.மதிவாணன், ஏஐடியுசி ஆட்டோ சங்க மாவட்டச் செயலாளர் இரா.செந்தில்நாதன் மற்றும் கணபதி, சுரேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் முறைகேட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

திருநாவலூர் ஒன்றியத்தில் செம்மனந்தல் ஊராட்சியில், ஊராட்சி மன்ற தலைவர் உமாவின் கணவர் நடராஜன் பினாமியாக மூன்று நாட்களுக்கு முன்பாகக் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் கட்டிய வீடு, சன்சைட் ஸ்லாப் முற்றிலும் இடிந்து விழுந்தது, அதில் மூன்று பேர் காலில் முறிவு ஏற்பட்டு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு, 19ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் முருகனிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

# மாத்தி யோசி



**ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் (JNU) ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் பி.எஸ். புத்தோலா மற்றும் பிரகாஷ் உப்பாத்யாய் மே தினக் கூட்டங்களில் பங்கேற்பதற்குப் பதிலாக கடந்த 13 ஆண்டுகளாக, தில்லியின் ஷாதிப்பூர் பகுதியிலுள்ள ஒரு சிறிய புத்தகக் கடைக்கு புதிய நம்பிக்கையைத் தேடி வருகிறார்கள்.**

மாற்று அரசியலும் கலாச்சாரமும் கல்வியும் தேடலாய் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் அங்கு மே தினத்தன்று வருவதைப் பார்ப்பது அவர்களுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் தருகிறது.

“இந்த இளைஞர்கள் கனவைக் காண்பதோடு அதை நிறைவேற்றவும் நினைப்பது போலிருக்கிறது,” என்கிறார் பேரா.உப்பாத்யா.

மே 1ம் தேதி, சர்வதேசத் தொழிலாளர் தினத்தோடு, தில்லியின் இடதுசாரி புத்தகக் கடையாக விளங்கும் ‘மே டே புத்தகக் கடை’ தனது 13வது ஆண்டு விழாவையும் கொண்டாடியது. அந்நிகழ்வில் பல்வேறு கலைஞர்கள், கவிஞர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். தேர்ந்தெடுக்கப்பட்ட




சில நூல்களுக்குச் சிறப்புத் தள்ளுபடியும் வழங்கப்பட்டது.

பணியாளர்களின் உரிமைகள் குறித்த சிறிய 10–15 நிமிட உரைகள் இடைவெளிகளுடன் நடந்தன. அந்த இடைவெளிகளில் பார்வையாளர்கள் புத்தகங்களைப் பார்வையிடலானார்கள். மே மாத கடும் வெப்பத்தையும் பொருட்படுத்தாமல், 600க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சிக்கு வந்தனர். அவர்களில் பெரும்பாலோர் 30 வயதிற்குள் உள்ள இளைஞர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாலை 12:30 மணிக்கே, ஜோல்னா பையை மாட்டிக் கொண்டு, குர்தா சகிதனாய் மாணவர்கள் கடைக்குப் படையெடுக்க ஆரம்பித்தனர். அந்தக் கடை, ஒரு வீடு மற்றும் துணிக்கடைக்கிடையில் அமைந்துள்ளது. முதன்மையான வணிகப் பகுதியிலிருந்து தள்ளி அமைந்திருந்தாலும், அந்தப் பகுதியில் கூட்டம் கூடி அன்றைய மே தின நிகழ்வினில் பங்கேற்க ஆவலுடன் வந்திருந்தனர்.

முதலாவது நிகழ்ச்சி எழுத்தாளர் அசோக் திவாரியின் கவிதை வாசிப்பு. அதன்பின் பாலஸ்தீனியருக்கு அர்ப்பணிக்கப்பட்ட தெரு நாடகம் ஜனா நட்ய மஞ்ச் குழுவினரால் நடத்தப்பட்டது.

மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள், பார்வையாளர்களுக்கு சாஹிர் லூதியான்வியின் கீழ்க்காணும் மேற்கோள் எழுதப்பட்ட பதக்கங்களை வழங்கினர்:

“சுபஹ் ஹுமீ ஸே ஆயேகீ (விடியல் நம்மால்தான் வரும் என்று பொருள்)”.

அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளிலிருந்தும் மக்கள் நிகழ்வுகளைப் பார்த்தனர்; சிலர் காணொளிகளாகப் பதிவு செய்தனர்.

தெருவில் இருந்த ரிக்ஷா ஓட்டிகள் தங்கள் வாகனங்கள் மீது அமர்ந்து நாடகத்தைப் பார்த்தனர். மதியம் 1 மணிக்குப் பள்ளி முடிந்ததும், குழந்தைகள் கூட்டமும் அங்கு சேர்ந்து, ஸ்வீடனில் உருவாக்கப்பட்ட “லேவா பாஸ்தீனா” என்ற பின்னணிப் பாடலுடன் நடிகர்களின் சாகசங்களை வியந்து பார்த்து அவதானித்தனர்.

மே டே புத்தகக் கடையின் நிறுவனரான சுதன்வா தேஷ்பாண்டே கூறுகிறார்: “இந்தக் கடை உருவாக்கப்பட்டதின் நோக்கம் இடதுசாரி இலக்கியங்களை எளிமையாகப் பெறுவதற்கும், மாற்று அரசியல், சமூகப் பிரச்சனைகள் குறித்து கலைஞர்கள், செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள் கலந்துரையாட ஒரு இடத்தை உருவாக்குவதற்கும் ஆகும்”. மே தின நிகழ்ச்சியில் அந்த நோக்கம் தெளிவாகப் பிரதிபலித்தது.

உட்புறத்தில், இரு மைக் ஸ்டாண்டுகள், ஒரு ஸ்பீக்கர் ஏற்பாட்டுடன் ஒரு தற்காலிக மேடை அமைக்கப்பட்டது. அந்த மேடையில் பல பிரபலங்கள் உரையாற்றினர்: எழுத்தாளர் சாஸ்வதி மஜூம்தார், பத்திரிகையாளர் தீஸ்தா சேதல்வாட், அனைத்து இந்திய வேளாண்மைத் தொழிலாளர்களின் சங்கத்தின் இணைச்செயலாளர் விக்ரம் சிங், பத்திரிகையாளர் சுமேதா பால், மாணவர் செயற்பாட்டாளர் டிப்ஸிதா தர், வழக்கறிஞர் ஜவாஹர் ராஜா ஆகியோர் அதில் அடங்குவர்.

இழக்கப்படும் வேலைவாய்ப்புகள், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டங்கள் (UAPA), வேளாண்குடி மற்றும் தொழிலாளர் பிரச்சினைகள், மே தின வரலாறு போன்ற தலைப்புகள் கலந்துரையாடப்பட்டன.

புத்தகக் கடை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இன்னொரு பகுதியில் தன்னார்வலர்கள் கடந்த சில வாரங்களாகக் கிடைக்கப் பெற்ற நன்கொடை பெற்ற நூல்களைக் குறைந்த விலைக்கு விற்றனர்.

மூத்த முன்மாதிரி பத்திரிகையாளர் மணிஷா மொண்டால் புகைப்படக் காட்சி, பாலினம் மற்றும் சாதியத்துடன் தொடர்புடைய பிரச்சனைகள் காட்சிப்படுத்தப்பட்டன. இதில், (உ.பி) ஹத்ராசில் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளான தலித் பெண்ணின் கட்டாயத் தகனத்திற்குப் பின்னர் நடைபெற்ற போராட்டத்தில், ‘தலித் மகளிரும் முக்கியம்’ (Dalit Women Matter) மற்றும் ‘ஜெய் பீம்’ என்ற பதாகையைப் பிடித்துப் போராடும் பெண்ணின் புகைப்படமும் இடம் பெற்றது. மற்றொன்று, மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகாடின் தலைமுடியை டெல்லிக் காவல்துறை இழுக்கும் காட்சியையும் பதிவு செய்தது.

மாணவர்கள் நூல்களைப் பார்க்க ஆர்வமாக உலாவியபோது, அதற்கு மேலே பல்வேறு போராட்டங்களின் புகைப்படங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. சிறிய அளவிலான சிற்றுண்டிச்சாலை ஒன்றும் மாணவர்களால் நடத்தப்பட்டு, பார்வையாளர்களுக்குச் சிற்றுண்டி மற்றும் பானங்கள் வழங்கப்பட்டன.

மே டே புத்தகக் கடை தனது தோற்றத்திலிருந்தே, ‘ஸ்டுடியோ சஃப்தர்’ என்ற நாடக அரங்கத்தினை, ஜன நாட்டிய மஞ்ச் குழுவின் ஆதரவுடன், கலைஞர்கள், கவிஞர்களுடன் தொடர்ச்சியான உறவுடன் இயக்கி வருகிறது.

கவிஞர் ஆகாஷ் கவுதம் தனது நௌக்ரி எனும் கவிதைத் தொகுப்பை வாசித்தார். “மே தினம் என்றால் தொழிலாளர்கள் குறித்து ஒரு நாளில் மட்டுமே நாம் சிந்திக்கிறோமா? எனச் சிலர் கேட்கிறார்கள். ஆனால் யாரும் அவர்களைப் பற்றிச் சிந்திக்காத நேரத்தில், ஒரு நாள் சிந்திப்பதும் கூட ஒரு நல்ல துவக்கமாக இருக்கலாம்,” என்றார். மேலும், தொழிலாளர் உரிமைகள் என்பது (ரொட்டி மற்றும் ஹக்) உணவிற்கும் உரிமைக்குமான போராட்டம் என்று விளக்கினார்.

ஜன நாட்டிய மஞ்ச் மற்றும் பீட் சீகர் ஆகியோரால் ஈர்க்கப்பட்ட ரிக்வஜித் மற்றும் கம்லேஷ் ஆகிய இருவர், விவசாயிகள் போராட்டம் மற்றும் நகர வாழ்க்கையைப் பற்றிய தங்கள் சொந்தப் பாடல்களைப் பாடி அசத்தினர்.

நிகழ்ச்சி, வரலாற்று மாணவியான யூஸ்ரா நக்வி பாடிய ஃபைஸ் அகமத் ஃபைஸ் எழுதிய “ஹம் தேகேங்கே” பாடலுடன் நிறைவுபெற்றது.

பொதுவாக, மே, ஜூன், ஜூலை மாதங்களில் புத்தகக் கடைகளுக்கான விற்பனை குறைகின்றது. ஆனால், மே டே புத்தகக் கடைக்கு இந்த விழாவால் இந்த மூன்று மாதங்களில் விற்பனைக்கு வாய்ப்பு கிடைக்கிறது. ஆர்வமுள்ள மாணவர்கள் இந்நிகழ்வை தங்கள் நண்பர்களிடம் பகிர்ந்து, அவர்களையும் அங்கு அழைத்துச் செல்கிறார்கள்.

நிகழ்ச்சியின் முடிவில் தேஷ்பாண்டே, கசான் கனஃபானி எழுதிய பாலஸ்தீனம் குறித்த புத்தகம் விற்றுத் தீர்ந்ததையும், மீண்டும் அங்கு கிடைக்கத் தொடங்கியதையும் அறிவித்தார்.

மே தினம் முழுவதும் நடந்த இந்த நிகழ்ச்சி வித்தியாசமானது மட்டுமில்லாமல் மிகுந்த வெற்றிகரமாகவும் அமைந்தது.

*நன்றி: தி பிரின்ட்*

*தமிழில்* **ஆனந்த் பாசு**

---

### பொள்ளாச்சி பாலியல் வழக்கு

## நீதிமன்றத் தீர்ப்புக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

நாட்டை உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வழக்கு, கோவை மகளிர் நீதிமன்றத் தீர்ப்புக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 பிப்ரவரி மாதம் நாட்டை உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வன்தாக்குதல், கும்பல் வன்முறை, தொடர் துன்புறுத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த கொடூரம் வெளியானது. மிருகங்களும் வெட்கப்படும் குற்றச் செயல் குறித்துத் துணிச்சலாக காவல் துறைக்கு 2019 பிப்ரவரி 19 ஆம் தேதி கொடுத்த புகாரில் இருந்து சட்ட நடவடிக்கை தொடங்கியது. இடையில் குற்றப்பிரிவு புலானாய்வுத் துறைக்கு வழக்கு மாற்றப்பட்டு, பின்னர் மத்திய புலனாய்வு துறைக்கு மாற்றப்பட்டது.

மத்திய புலனாய்வு துறை விசாரணை அதிகாரியின் விசாரணையும், சாட்சியங்களையும், ஆவணங்களையும் நீதிமன்ற விசாரணையில் நிலைநாட்டி, குற்றத்தை உறுதி செய்த முறை பாராட்டத்தக்கது. பாதிக்கப்பட்ட பெண்கள் அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் தங்களுக்கு நேர்ந்த கொடுமையை, குற்றவாளிகளின் மனிதத் தன்மையற்ற ஈனச் செயலை நீதிமன்றத்தில் நிலைநாட்டியதைப் போற்றிப் பாராட்டுகிறோம். குற்றவாளிகள் மீது முன்வைக்கப்பட்ட 76 குற்றச்சாட்டுகளில் 66 குற்றங்களை உறுதி செய்து, நிலைநாட்டிய விசாரணை அதிகாரிகள், சாட்சியளித்தவர்கள், இவைகளை தக்க முறையில் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று, குற்றங்களை நிரூபித்த மத்திய புலனாய்வு துறை வழக்கறிஞர் ஆகியோருக்கு நன்றி பாராட்டி வாழ்த்துகிறோம்.

பாலினச் சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் கோவை மகளிர் நீதிமன்றம் பொள்ளாச்சி பாலியல் வழக்கில் 9 குற்றவாளிகளுக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்தும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ரூ.85 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியிருப்பது, போராடும் பெண்களுக்கு வாளும், கேடயமுமாக உதவி சிறப்புப் பெறும் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு செயற்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. இவ்வாறு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வரவேற்பு

தமிழ் நாட்டையே உலுக்கிய பொள்ளாச்சிக் கூட்டுப் பாலியல் வன்புணர்வு சம்பவம் தொடர்பாக இடதுசாரி மற்றும் முற்போக்கு அமைப்புகளின் தொடர்ப் போராட்டங்கள், அனைத்துப் பெண்கள் கூட்டமைப்பு சார்பாக நடத்தப்பட்ட மனிதச் சங்கிலிப் போராட்டங்கள், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் நடத்திய நீண்ட நெடிய போராட்டங்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டங்கள், மாணவர் இளைஞர் அமைப்புகள் நடத்திய போராட்டங்கள், தி.மு.க வழக்கறிஞர் என அத்தனை தோழர்களுக்கும் போராளிகளுக்கும் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழ்நாடு மாநிலக் குழுவின் சார்பில் புரட்சிகர வாழ்த்துகளையும் நன்றியையும் உரித்தாக்குகிறோம்!

மேலும் உறுதிப்பட நின்று பிறழ் சாட்சிகளாக மாறாமல் எந்தவிதத் தயக்கமும் இன்றித் தானாக முன்வந்து இழைக்கப்பட்ட அநீதியையும் துயரத்தையும் வெளிக்கொண்டு வந்த அத்தனை பெண்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கிய நீதிபதி நந்தினி தேவி அவர்களுக்கு நெஞ்சார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேல்முறையீடு செய்தாலும் உயர், உச்ச நீதிமன்றங்கள் தண்டனையைக் குறைக்காமல் இத்தீர்ப்பினை உறுதி செய்ய வேண்டும்.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 85 லட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்க மாவட்ட சட்ட உதவி மையத்துக்கு உத்தரவு வழங்கியது பாராட்டுதலுக்குரியது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தீர்ப்பினை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழ்நாடு மாநிலக் குழு இரு கரம் கூப்பி வரவேற்பதோடு இன்னும் கூடுதலாக நிலுவையில் உள்ள அனைத்துப் பாலியல் வன்கொடுமை வழக்குகளையும் விரைந்து விசாரித்து நியாயமான தீர்ப்பை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறது.’ இவ்வாறு இந்திய மாதர் தேசிய சம்மேளனப் பொதுச் செயலாளர் மு.கண்ணகி அறிக்கை விடுத்துள்ளார்.

## பிராந்திய மேலாதிக்கத்திற்கான போட்டி

### பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

இந்தியா பாகிஸ்தான் இடையிலான மோதல் அதிகரித்து, போர்ப் பதற்றம் தீவிரமடைவது குறித்து பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக்குழு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மார்க்சிய லெனினிய மரபை அடித்தளமாகக் கொண்ட பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய முதலாளித்துவ அரசால் தொடங்கப்பட்ட இராணுவத் தாக்குதலையும், பாகிஸ்தான் ஆளும் வர்க்கத்தால் மேற்கொள்ளப்பட்ட எதிர் நடவடிக்கையையும் தீவிரமாகக் கண்டிக்கிறது. இவை விடுதலைக்கான போர்கள் அல்ல. பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்காக நடைபெறுவதும் அல்ல. உழைக்கும் வர்க்கத்தின் செல்வத்தில், பிராந்திய மேலாதிக்கத்திற்கான போட்டி முதலாளித்துவக் குழுக்களுக்கு இடையே நடைபெறும் இராணுவத் தாக்குதல்களாகும்.

இந்தியா, பாகிஸ்தான் நாட்டு ஆளும் வர்க்கங்கள் மேற்கொண்டுள்ள இந்த இராணுவ நடவடிக்கைகளில், இந்த நாடுகளைச் சேர்ந்த பெருந்திரளான உழைக்கும் மக்களுக்கு எந்தப் பங்கும் இல்லை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள பிராந்தியத்தில் நடக்கும் இதுபோன்ற ஆத்திரமூட்டும் இராணுவ நடவடிக்கைகள், துணைக்கண்டத்தையே அழித்துவிடும் ஆபத்தைக் கொண்டுள்ளன. இதிலிருந்து சாதி, வர்க்கம், மதம் சார்ந்த எவரும் தப்பிவிட முடியாது. எந்தப் பாகுபாடும் இன்றி தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் ஏழை மக்களின் வாழ்வாதாரமும் வாழ்க்கையும் அழிக்கப்பட்டுவிடும்.

இதுபோன்ற இராணுவ நகர்வுகள், முதலாளித்துவச் சுரண்டலால் அதிகரித்து வரும் நெருக்கடி, பணவீக்கம், வேலையின்மை, சமூக அமைதியின்மை போன்றவற்றில் இருந்து மக்களை திசைதிருப்பும் மறைப்புகளாகப் பயன்படுகின்றன. பிற்போக்கான தேசியவாதத்தைத் தூண்டி, வர்க்க விழிப்புணர்வு பெற்று எழுச்சி அடையாமல் நசுக்குவதற்கான உத்தியாக முதலாளித்துவ ஆட்சியாளர்கள் நீண்ட காலமாக இதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தப் போலி தேசிய வாதத்தை நிராகரித்துப் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பின்னால், தெற்காசியா முழுவதும் உள்ள பாட்டாளி வர்க்கமும், முற்போக்குச் சக்திகளும் அணிதிரள வேண்டும் என பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சி அழைப்பு விடுக்கிறது.

எமது போராட்டம் எல்லைகள் கடந்த தொழிலாளி வர்க்கத்திற்காக மட்டுமல்ல, தரகு முதலாளிகள், நிலப்பிரப்புத்துவ எச்சங்கள், இராணுவத் தொழில்துறை கூட்டமைப்புகள் இரத்தத்தை உறிஞ்சி லாபம் குவிப்பதற்கு எதிரானதுமாகும்.

ராஜதந்திரத்தைக் கையாள்வதன் மூலம் அரசுகளுக்கு இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டுவந்து, நிரந்தர அமைதியை ஏற்படுத்திவிட முடியும் என்பது மாயையாகும். முதலாளித்துவ இராணுவ வாதத்தை அகற்றி, முதலாளித்துவத்தைத் தூக்கியெறியும் சமூகப் புரட்சியை நடத்துவதன் மூலமும், எல்லைகள் கடந்து பாட்டாளி வர்க்கம் ஒன்றுபடுவதன் மூலமுமே அமைதியைக் கொண்டுவர முடியும்.

பேரினவாதப் போர் முரசங்களை மவுனிக்கும் வகையில் சர்வதேச ஒற்றுமை ஓங்கட்டும்.

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்!

புரட்சி ஓங்குக!

## பிரதமரே பிரித்தாளுகிறார்

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்களை மட்டும் வரும் மே 25ந் தேதி, பிரதமர் மோடி சந்தித்து பேச இருப்பதாக கூறப்படுகிறது. அப்படியானால் கர்நாடகா, மேற்கு வங்கம், தமிழ்நாடு, தெலுங்கானா, இமாச்சல பிரதேசம், பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் மாநிலங்களின் முதலமைச்சர்கள் என்னதான் தவறு செய்துவிட்டார்கள்? ஏன் அவர்களை அழைத்துப் பேச மறுக்கிறார் பிரதமர் மோடி? சிந்தூர் ராணுவ நடவடிக்கையை அப்பட்டமாக அரசியலாக்குவதுதானே இது?

ஒருபக்கம் எதிர்க்கட்சிகள் எழுப்புகிற எந்த கேள்விக்கும் பிரதமர் மோடி பதிலளிப்பதே இல்லை. ஒன்றிய அரசு கூட்டுகிற அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் அவர் பங்கேற்பதும் இல்லை. இன்னொரு பக்கம் இப்படி பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்களை மட்டுமே பிரதமர் மோடி சந்தித்து பேச இருக்கிறார். இதனை எப்படி ஏற்பது?

திருமணம் என்றால் தானே மாப்பிள்ளை ஆகவும், சாவு வீடென்றாலும் தனக்கே முதலிடம் என்பதை போன்ற விளம்பர வெறி இது! தேசத்தை ஒருங்கிணைக்க வேண்டிய பிரதமரே பிரித்தாளுகிறார். இந்த கதாநாயகத் தனம் எதற்கும் உதவாது.

# போரும், பே






த.லெனின்

**‘போர் என்பது அரசியலின் வேறு வடிவம்’ என்றார் ஜெர்மன் நாட்டின் புகழ்பெற்ற ராணுவக் கொள்கையாளர் கார்ல் வான் கிளாஸ்விட்ஸ்.**

அதாவது, போர் என்பது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, இராணுவ பலத்தால் வகைப்படுத்தப்படும் அரசியல் உறவின் ஒரு வழிமுறையாகும் என அவரது புகழ் பெற்ற புத்தகமான ‘ஆன் வார்’ என்பதில் கூறியுள்ளார்.

### பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல்

காஷ்மீர் பஹல்காமில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 26 அப்பாவி இந்தியச் சுற்றுலாப் பயணிகள் படுகொலை செய்யப்பட்டனர். இதனை ஒட்டி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பதற்றம் அதிகரித்தது.

சுமார் 5,00,000 இந்திய வீரர்கள் காஷ்மீர் பிரதேசத்தில் நிரந்தரமாக நிறுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக இந்த இடம் மூன்று அடுக்குப் பாதுகாப்பு என்று சொல்லப்படுகிறது. இருந்தும் இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இது இந்தியப் பாதுகாப்புக் குறைபாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு காஷ்மீரின் சிறப்பு அதிகாரத்தை, பிரிவு 370ஐ ரத்து செய்ததிலிருந்து பாதுகாப்பு நிலைமை மேம்பட்டுள்ளதாகவும், வன்முறைகள் குறைந்துள்ளதாகவும் மோடி அரசு கூறுகிறது. ஆனால், இன்னும் வன்முறைச் சம்பவங்கள் நடந்து வருகின்றன என்பது உண்மை.

பஹல்காம் தாக்குதலுக்குப் பின்னர் எல்லையில் தொடர்ந்து 10 நாட்களாக அங்கு துப்பாக்கிச் சூடு அதிகரித்து வந்தது. கடந்த ஏப் 22ம் தேதியில் நடந்த பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, பாகிஸ்தான் தொடர்ந்து ஒன்பது நாட்களாக எல்லையில் அத்துமீறித் தாக்குதல் நடத்தி வந்தது. கடந்த 10 நாட்களில் இது மிகப்பெரிய மோதலாக உருவாகவில்லை என்றாலும் ஏற்கெனவே 2001, 2003 ஆம் ஆண்டுகளில் போட்டப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியே இத்தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்தத் தாக்குதல்கள், குப்வாரா, பாரமுல்லா, பூஞ்ச், ராஜவுரி, மெந்தர், நவ்ஷேரா, சுந்தர்பனி மற்றும் அக்னூர் பகுதிகளில் அமைந்துள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் பாகிஸ்தான் தரப்பு இந்திய நிலைகளை நோக்கித் துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தியது. அதற்கு இந்திய ராணுவம் உடனடியாகப் பதிலடித் தாக்குதல் கொடுத்தது என்று கூறப்படுகிறது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா பாகிஸ்தான் இடையே பதற்றம் பெருமளவு அதிகரித்து வருவதால், இந்தியா சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தியது, அட்டாரி எல்லையை மூடியது, பாகிஸ்தானியர் களுக்கான விசா ரத்து என்பது போன்ற பதிலடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதிகம் மழை பெய்த காரணத்தால் இந்திய அணைகள் இரண்டு முறை திறக்கப்பட்டு சிந்து நதியில் தண்ணீர் விடப்பட்டது. பாகிஸ்தான் தரப்பில், இந்தியா ராணுவ நடவடிக்கை எடுக்கலாம் என்று கணித்தது. ஐ.நா மற்றும் அமெரிக்கா இரு நாடுகளையும் போர்ப் பதற்றத்தைத் தணிக்குமாறு வலியுறுத்தியுள்ளன.

இருப்பினும், இந்தியா எதிர்பாராத பதிலடிகளைக் கொடுக்கும்‘ என்று அப்போதே பிரதமர் மோடி எச்சரிக்கை விடுத்தார்.

எந்நேரமும் பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தக்கூடும் என்கிற பதற்றச் சூழலும் உருவானது. இந்நிலையில், கடந்த 6ம் தேதி செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் பாகிஸ்தானுக்குள்ளும், ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் இந்தியா தன்னுடைய அதிரடியைக் காட்டியது. பாகிஸ்தான் தீவிரவாதிகளின் முகாம்கள் அழித்தொழிக்கப்பட்டன என்று இந்தியா அறிவித்தது. கடந்த பத்து நாட்களாக இந்தியா அறிவித்த பிறகும் பயங்கரவாதிகள் முகாம்களிலேயே இருந்திருப்பார்களா? எனக் கேட்டால், நமது தேச பக்தி சோரம் போய்விட்டது என்பார்கள். பயங்கரவாதிகள் அனைவரும் கொல்லப்பட்டதாகத் தெரிய பட்டியலையும் வெளியிட்டது. ஆனால் இதன் உண்மைத்தன்மை சந்தேகத்திற்குரியதாகவே இன்றுவரை உள்ளது.

### தேர்தலுக்கான கருவியாகும் போர்

இந்தியா – பாகிஸ்தான் போர்ப் பதற்றத்தை வைத்து பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ், பஜ்ரங் தளம், விஸ்வ இந்து பரிஷத், ஏபிவிபி உள்ளிட்ட இந்துத்துவா அமைப்புகள் தங்களது மதவெறி அரசியலைத் தீவிரப்படுத்தியுள்ளன. குறிப்பாக பாஜக ஆளும் மாநிலங்களில் இந்துத்துவா கும்பல் பாகிஸ்தான் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மத வன்முறையைத் தூண்டும் வகையில் ஊர்வலம், வெறுப்புப் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன.

தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் ஒரு இந்துவால் நடத்தப்படும் பாகிஸ்தான் நாட்டின் முக்கிய நகரமான ‘கராச்சி’என்ற பெயரில் உள்ள உணவகத்தை பாஜக ஆர்எஸ்எஸ் கும்பல் அடித்து நொறுக்கியது. அதே போல பஹல்காம் தாக்குதல் நடந்த நேரத்தில் பாஜக ஆளும் மாநிலங்களில் இரண்டு இசுலாமிய இளைஞர்கள் அடித்துக் கொல்லப்பட்டனர். பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களில் ஜம்மு காஷ்மீர் மாணவர்கள், வணிகர்களை “பாகிஸ்தான் நாட்டின் கைக்கூலி” என முத்திரை குத்தி அரசின் உதவியோடு இந்தக் கும்பல்களால் வெளியேற்றப்பட்டனர்.

குறிப்பாக இந்தியா பாகிஸ்தான் போர்ப் பதற்றத்தை பீகார் சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரப் பொருளாக பாஜக பயன்படுத்தி வருகிறது. சவுதியில் இருந்து பயணத்தை ரத்து செய்து வந்த பிரதமரே இந்தத் திருப்பணியைத் துவக்கி வைத்து விட்டார். ஆக இவர்களுக்குப் போர், தேர்தலுக்கான ஒரு கருவியாகவே பார்க்கப்படுகிறது.

### வெளியுறவு அதிகாரி மீது விஷமத் தாக்குதல்

போர்ப் பதற்றத்தைத் திறம்படக் கையாண்ட இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் அவரது குடும்பத்தினரைக் குறிவைத்து, ‘’நீங்கள் எப்படி பாகிஸ்தானுக்கு எதிரான போரை நிறுத்தலாம்’’ எனச் சமூக வலைத்தளங்களில் ஆபாச அவதூறு பரப்பி விஷமப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக அவர் தனது எக்ஸ் தளத்தையும் முடக்கி வைத்து விட்டார். ஒன்றிய பாஜக அரசு எடுக்கும் முடிவை அறிவித்ததற்கே இந்த நிலை என்றால் இவர்கள் நோக்கம் என்ன?

### போர் என்பது திரைப்படம் அல்ல

அதேபோல கொண்டாடப்பட வேண்டிய விஷயமும் அல்ல. போர் எவ்வளவு மோசமானது, ஒரு நாட்டிற்கு எவ்வளவு இழப்பை




அப்பாவி மக்களை ஏமாற்றும் கோதி மீடியாக்கள் பொய் வீடியோக்கள், புகைப்படங்கள் பதிவிட்டு மோடிக்கு வாக்கு வங்கி உயர்த்தும் வேலை செய்து வருவதை பிபிசி ஆதாரத்தோடு அம்பலப்படுத்திவிட்டது.

அமெரிக்காவின் சி.என்.என் செய்தியாளர் அமெரிக்க மக்களுக்கு எதைத் தெரிவிக்கிறார்?

நான் ஒரு ஆதாரத்துடன் பேசிக் கொண்டிருந்தேன், அவர் நேரடியாக அந்த நிகழ்வு நடந்த அறையில் இருந்தவர். அவர் கூறுகிறார். அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ரூமியோ இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை (ceasefire) ஏற்படுத்துவதில் மிகப் பெரிய பங்கு வகித்தார். இந்தப் போர் நிறுத்தம் 48 மணி நேரமாகத் தயாரிக்கப்பட்டு வந்தது. இதற்காக பாகிஸ்தான் தனது இராணுவ நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து (military

# ாலி தேசபக்தியும்!



ஏற்படுத்தும் என எனக்கு நன்றாகத் தெரியும். போரால் எண்ணற்ற உயிர்ச் சேதங்கள் ஏற்படும். குழந்தைகள் பெற்றோர்களை இழப்பர். குடும்பங்கள் உணர்வு ரீதியான அதிர்ச்சிகளைப் பல தலைமுறைகளுக்குச் சுமப்பர். ஒரு ராணுவ வீரராக எனக்கு உத்தரவிடப்பட்டால் போரை முன்னெடுப்பேன். ஆனால், அது என் முதல் தேர்வாக இருக்காது, முதல் நடவடிக்கை எப்போதும் பேச்சு வார்த்தைதான்" எனக் கூறி இந்துத்துவா கும்பல்களுக்கு சாட்டையடி பதில் கொடுத்துள்ளார் முன்னாள் ராணுவத் தளபதி எம்.எம். நரவனே.

### மதவெறிக்கு ராணுவத்தை இழுப்பதா?

ஒருபக்கம்தேசபக்திபற்றிஅனைவருக்கும் வகுப்பு எடுத்துக்கொண்டிருக்கும் பாஜகவும், சங்கப் பரிவார் அடிபொடிகளும் இந்த செந்தூர் ராணுவ நடவடிக்கைக்குக் காரணமான கர்னல் சோபியா கொரேஷி குறித்து சர்ச்சை கிளப்பி வருகின்றனர். அவர் பாகிஸ்தானியர்களின் சகோதரி என்றும் பேசி வருகின்றனர். அதாவது, நமது சகோதரிகளின் குங்குமத்தை அழித்தவர்களை அவர்களின் சகோதரியை வைத்து பிரதமர் மோடி ஒழித்துவிட்டதாக பாஜக அமைச்சர் குன்வார் விஜய் ஷா கூறியிருந்தார். கர்னல் சோபியா இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரைத் பயங்கரவாதிகளின் சகோதரி எனச் சித்திரிக்கும் வகையில் அமைச்சர் பேசியதற்கு இடதுசாரிகள், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர். இதன் பிறகு பாஜக அமைச்சர் குன்வார் விஜய் ஷா இதற்காக மன்னிப்புக் கோரியிருக்கிறார்.

### விஸ்வகுரு பிம்பம் உடைந்தது!

விஸ்வகுரு என்று கட்டமைக்கப்பட்ட மோடியின் பிம்பம் வெற்று அரசியல் பிரச்சாரமே என்பது வெளிப்பட்டு விட்டது. இந்தப் பிம்பத்தைக் கட்டமைப்பதற்காக அமெரிக்காவில் நடந்த அதிபர் தேர்தலில் பிரதமர் மோடி பங்கேற்று டொனால்ட் ட்ரம்புக்காகப் பிரசாரம் செய்தார். ஆனால் அது பாதகமாக முடிந்தது. இப்போது இவை எல்லாமே கூனிக் குறுக வைத்து விட்டது. எதிர்க்கட்சிகளின் அடுக்கடுக்கான கேள்விகளுக்குப் பிறகு இப்போது அமெரிக்காவை மிஞ்சுவது போல மோடி பேசி இருக்கிறார். போரை நிறுத்தவில்லை என்றால் இரண்டு நாடுகள் மீதும் வரி விதிப்புக் கொள்கையில் மாற்றம் கொண்டு வருவேன் என்றார் ட்ரம்ப். அதற்குப் பதிலளிக்கும் முகமாக மோடி பயங்கரவாதத்தையும், வரிவி திப்பையும் ஒன்றாகக் கருத முடியாது என்று ஓரம் சாரமாக பேசியிருக்கிறார். இந்தியாவில் பலரும் இதைக் கேள்விக்கு உள்ளாக்கிய போதுதான் இப்போது மூன்றாவது நாடு இந்த பேச்சுவார்த்தையில் இருக்க வேண்டியதில்லை என்று பேசத் தொடங்கி இருக்கிறார்கள். பாகிஸ்தானின் பயங்கரவாதத் தாக்குதலைப் பயன்படுத்தி அதனை சர்வதேசச் சமூகத்திடமிருந்து தனிமைப்படுத்தியிருக்க வேண்டும். அதைவிட்டு விட்டு போர் என்றதால், இப்படி பிரச்சினையாகிவிட்டது. இரண்டு நாடுகளுமே அணுஆயுத நாடுகள். உணர்ச்சிவயப்பட்டால் அழிவு இருவருக்கும்தான் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### அமெரிக்க ஊடகங்களில் ..

நான்கு நாட்கள் ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களுக்குப் பிறகு, இந்தியாவும் பாகிஸ்தானும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளன என்று நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டது. ஆனால் சில மணி நேரங்களுக்குப் பிறகு எல்லையில் தாக்குதல் தொடர்ந்ததாக தகவல்கள் வந்தன. அமெரிக்க அதிபர் டிரம்ப் சமூக ஊடகங்களில் இந்தியாவும் பாகிஸ்தானும் சண்டை நிறுத்தத்தை ஒப்புகொண்டதாக கூறி, இது அமெரிக்காவின் மத்தியஸ்தால் நடந்தது எனக் கூறினார்.

இந்தியாவும், பாகிஸ்தானும் சண்டை நிறுத்தத்தை உறுதிப்படுத்தினர். ஆனால் பாகிஸ்தான் மட்டுமே அமெரிக்காவின் பங்கை ஒப்புக்கொண்டது என்று நியூயார்க் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

### பிரிட்டன் ஊடகங்களின் கருத்து என்ன?

கடந்த 2016–2019 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமான மோதல்கள் காஷ்மீர் உள்ளிட்ட எல்லைப் பகுதிகளுக்குள் மட்டுமே இருந்தன. ஆனால் இந்த முறை இரு நாடுகளுக்கும் இடையே மோதல் மிகவும் கடுமையானதாக இருந்தது. இரு நாடுகளும் பரஸ்பரம் டிரோன்களை ஏவியும், விமானத் தளங்களைக் குறிவைத்தும் சண்டையிட்டன என்கிறது பைனான்சியல் டைம்ஸ்.

### அரபு ஊடகங்கள் கூறியது என்ன?

நான்கு நாட்கள் ஆளில்லா விமானம், ஏவுகணைகள் மற்றும் ஜெட் போர் விமானத் தாக்குதல்களுக்குப் பிறகு, சனிக்கிழமையன்று இரு நாடுகளும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டன. இரு நாடுகளுக்குமான மோதலில் குறைந்தது 60 பேர் கொல்லப்பட்டனர். எல்லையில் இருந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இருந்தாலும், சண்டை நிறுத்தத்தை அறி வித்தது டொனால்ட் டிரம்ப் என்பதுதான் ஆச்சரியமாக இருந்தது என அரபு நியூஸ். காம் குறிப்பிட்டுள்ளது.

### வங்கதேச ஊடகத்தில் வந்த செய்தி

சண்டை நிறுத்த புரிதல் மேற்கொள்ளப்பட்டதற்காக இந்தியா மற்றும் பாகிஸ்தான் பிரதமர்களுக்கு இடைக்கால அரசின் வங்கதேசத் தலைமை ஆலோசகர் பேராசிரியர் முகமது யூனுஸ் பாராட்டுகளைத் தெரிவித்தார் என்று டெய்லி ஸ்டார் வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மத்தியஸ்தராகச் செயல்பட்டதற்காக டொனால்ட் டிரம்பிற்கு முகமது யூனுஸ் நன்றி தெரிவித்தார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நேபாள ஊடகங்களில் வந்த செய்தி

தெற்காசிய மையத்தின் அட்லாண்டிக் கவுன்சிலின் உறுப்பினர் ஷுஜா நவாஸ், எதிர்வரும் நாட்களில், சிந்து நதிநீர் ஒப்பந்தம் தொடர்பாக முக்கிய விவாதங்கள் நடைபெறும் என்று கூறுகிறார். அப்போது, இரு நாட்டு அரசாங்கங்களும், இந்தச் சண்டையில் தாங்கள் சாதித்தவை குறித்து பெருமைப்பட வாய்ப்பு கிடைக்கும் என்று காத்மாண்டு போஸ்ட் செய்தி வெளி யிட்டுள்ளது.

### சீனப் போர் விமானங்கள்

சீனாவின் அதிநவீன ஜே 10 சி மற்றும் ஜேஎஃப் 17 தண்டர் போர் விமானங்களை பாகிஸ்தான் பயன்படுத்துகிறது. ஜே 10 சி சீன நிறுவனமான செங்டு ஏர்கிராஃப்ட் கார்ப்பரேஷனால் தயாரிக்கப்படுகிறது. ஜேஎஃப் 17 தண்டர் சீனா மற்றும் பாகிஸ்தானால் கூட்டாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனை எடுத்து இந்த நிறுவனங்களின் உலக பங்குச் சந்தை மதிப்பு உயர்ந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. உலக அளவில் வெளியிடப்பட்ட முதல் 10 உயர் ரக போர் விமானங்களில் இந்த வகை அமெரிக்காவுக்கு அடுத்த இரண்டாவது இடத்தில் இருக்கிறது, ஏழாவது இடத்தில் இருப்பது என்பதும் கவனிக்கத்தக்கது.

### பொய்த்துப் போன ரஃபேல்

இந்திய, பாகிஸ்தான் போரின் போது சர்வதேச ஊடகத்தினர் மற்றும் பாதுகாப்பு ஆய்வாளர்கள் பலரும் இந்தியாவின் ரபேல் உள்ளிட்ட பல போர் விமானங்களை பாகிஸ்தான் பயன்படுத்திய சீன யி 17, J – 10 ஆகிய போர் விமானங்கள் அழித்துவிட்டதாகக் குறிப்பிடுகிறார்கள். இந்திய விமானப் படையோ இதனை மறுக்கவில்லை. பாகிஸ்தான் சீன விமானங்களுக்குக் கொடுத்த தொகையை விட நான்கு மடங்கு அதிக விலை கொடுத்து ரபேலை இந்தியா வாங்கியுள்ளது எனில் இந்த ஒப்பந்தத்திற்காக மிகவும் பாடுபட்ட மோடி ஆட்சி இதற்காகப் பொறுப்பேற்க வேண்டும். அதில் நடைபெற்ற ஊழல் இப்போது வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

தொடர்புக்கு: 9444481703

## பொய்ச் செய்தி பரப்பும் ஊடகங்கள்

pause) ராணுவப் பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு வாய்ப்பு அளித்திருந்தது.

இந்தியா மூன்று விமானத் தளங்களைத் தாக்கியது, அவற்றில் ஒன்று பாகிஸ்தான் தலைநகருக்கு அருகே உள்ளது. இதற்குப் பதிலடியாக, பாகிஸ்தான் இந்தியாவின் இராணுவ வசதிகள், விமானத் தளங்கள், ஆயுதக் கிடங்குகள் மற்றும் காஷ்மீரில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் (Line of Control) உள்ள இராணுவத் தளங்களை நோக்கிக் கடுமையான ஏவுகணை மற்றும் ராக்கெட் தாக்குதல்களை (relentless massive barrage) நடத்தியது.

பாகிஸ்தானின் கூற்றுப்படி, அரசுச் செயலாளர் ரூபியாவுடன் தொடர்பு கொண்டு இந்தத் தாக்குதல்களைப் பற்றித் தெரி வித்தனர். இது இந்தியாவைத் திகைப்பில் ஆழ்த்தியது (put India on the back foot), ஏனெனில் இந்தியாவுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. இதையடுத்து, இந்தியா, ரூபியாவைத் தொடர்பு கொண்டு, மற்றவர்களுடன் போர் நிறுத்தத்திற்கான ராணுவப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது.

"India according to Pakistan reached out to secretary rubia, raised out to the service reached out, reached out to others"

இந்தியாதான் முதலில், பாகிஸ்தானின் தாக்குதலுக்குப் பிறகு தொடர்ந்து 48 மணி நேரமாக ரூபியாவையும் மற்றவர்களையும் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது என்று கூறப்படுகிறது. இது இந்தியா உடனடியாகப் போர் நிறுத்தத்தை வலியுறுத்தியதாக நேரடியாகக் கூறாவிட்டாலும், பாகிஸ்தானின் தாக்குதலுக்குப் பதிலாகப் பேச்சுவார்த்தை வழியைத் தேடியதாக உணர்த்துகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதில் உள்ள உண்மை நிலையை நாட்டு மக்களுக்கு மோடியும் இந்திய அரசும் வெளிப்படுத்த வேண்டும்?

இந்தியா உடனடியாக ரூபியாவையும் மற்றவர்களையும் தொடர்பு கொண்டு போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது என்று கூறப்படுவது, போர் நிறுத்தத்தை வலியுறுத்தியதற்கு ஒரு மறைமுக அறிகுறியாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. அப்படியெனில் இந்த ஒப்பந்தத்தை ட்ரம்ப் இதற்கு முன்பே அறிவித்ததும் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளன. நிலைமை இவ்வாறு இருக்க இந்திய ஊடகங்களோ வெற்றி விழா கொண்டாட்டங்களையும், வாணவேடிக்கைகளையும் காட்டியது. அதிலும் குறிப்பாக பல நாடுகளில் நடந்த போர்க் காணொளிக் காட்சிச் சுருள்களை இப்போது நடந்தது போல காட்டி அவையும் தங்களது உண்மை முகத்தை, எஜமான விசுவாசத்தை வெளிக்கொண்டு வந்தன.

## சீனாவின் மீது பொய்க் குற்றச்சாட்டுகள்

பாகிஸ்தான் ராணுவத்துக்குத் தேவையான பெரும்பான்மையான ஆயுதங்களைச் சீனாவில் இருந்தே கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் சீனாவும், பாகிஸ்தானும் மிக நெருங்கிய நட்பு நாடுகளாக உள்ளன. பாகிஸ்தான் விமானப்படையில் உள்ள ஜே17 போர் விமானங்களை இரு நாடுகளும் கூட்டாக உற்பத்தி செய்கின்றன. சமீபத்தில் பாகிஸ்தான், இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்திய ஜெட் போர் விமானங்கள், ரேடார்கள் ஆகியவை சீனத் தயாரிப்புகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே சண்டை நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில் ஆயுதங்கள் மற்றும் ராணுவத்துக்குத் தேவையான பொருட்களுடன் சரக்கு விமானம் ஒன்றை பாகிஸ்தானுக்கு சீனா அனுப்பியதாக இணைய தளங்களில் நேற்று தகவல்கள் பரவின. தற்போதைய சூழ்நிலையில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்த்த தகவலை சீனா உடனடியாக மறுத்துள்ளது. இது தொடர்பாக சீன மக்கள் விடுதலை ராணுவ விமானப்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி யிருப்பதாவது:பாகிஸ்தானுக்கு ஒய்20 என்ற சரக்கு விமானம் மூலம் ஆயுதங்கள் அனுப்பப்பட்டதாக வெளிவந்துள்ள தகவல் முற்றிலும் தவறானது. அது வதந்தியாகும். அதை யாரும் நம்ப வேண்டாம்.

ராணுவம் தொடர்பான வதந்திகளை உருவாக்கிப் பரப்புபவர்கள் மீது சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆசியாவில் அமைதியை சீனா விரும்புகிறது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சண்டை நிறுத்தத்தை ஏற்படுத்துவதில் சீனா ஆக்கபூர்வமாகப் பங்காற்றியுள்ளது என்று சீன அரசின் டேப்ளாய்டு குளோபல் டைம்ஸை எச்சரித்ததும் குறிப்பிடத்தக்கது.

## 8 ஆயிரம் எக்ஸ் கணக்குகள் முடக்கம்

சீன அரசு ஊடகமான க்ளோபல் டைம்ஸின் எக்ஸ் (டுவிட்டர்) கணக்கை இந்திய அரசு முடக்கியுள்ளது. அதேபோல், துருக்கியின் டிஆர்டி வோர்ல்ட்ன் எக்ஸ் கணக்கும் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளது

முன்னதாக எக்ஸ் நிறுவனம் அதன் க்ளோபல் கவர்ண்மெண்ட் அஃபேர் கணக்கு மூலமாக, இந்திய அரசின் அறிவுறுத்தலின்படி 8,000 எக்ஸ் கணக்குகளை இந்தியாவில் முடக்குவதாக மே 8ம் தேதி தெரிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது

# எழுத்தாளர் கொ.ம.கோதண்டம் எழுதிய நூல்கள் அரசுடைமை

**மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நேரில் வாழ்த்து**



இராஜபாளையம் கொ.ம.கோதண்டம் எழுதிய நூல்களை அரசுடைமையாக்கித் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ரூ.10 லட்சம் வழங்கியிருந்தார். இராஜபாளையம் ஏஐடியுசி மில் தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினராக இருந்து கொ.ம.கோதண்டம் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இராஜபாளையம் வருகை தந்த கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், எழுத்தாளர் கொ.ம.கோதண்டம் வீட்டிற்கு நேரில் சென்று சால்வை அணிவித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார். எழுத்தாளர் கொ.ம.கோதண்டம் இணையர் ராஜேஸ்வரி கோதண்டம், கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்டச் செயலாளர் லிங்கம் எக்ஸ் எம்.பி, மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வி.இரவி, நகரச் செயலாளர் விஜயன், இளைஞர் பெருமன்றம் மாவட்டச் செயலாளர் பகத்சிங் ஆகியோர் உடனிருந்தனர்.

## மும்மொழிக் கொள்கை


# உச்ச நீதிமன்ற முடிவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

மும்மொழிக் கொள்கை உச்ச நீதிமன்ற முடிவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

பாஜகவைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜி.எஸ்.மணி, தேசியக் கல்விக் கொள்கைப்படி தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்க மாநிலங்களில் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்த உத்தரவிட வேண்டும் என்று பொதுநல மனுத் தாக்கல் செய்திருந்தார்.

பொது நல மனுவை 09.05.2025 அன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், மாநில அரசு, தேசியக் கல்விக்கொள்கையைச் செயல்படுத்தாதது மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் அல்ல எனவும் கருத்துத் தெரிவித்து, பொதுநல மனுவைத் தள்ளுபடி செய்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வரவேற்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஒசூர் தோழர் கே.எஸ்.கிருஷ்ணப்பா மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



ஒசூர் தோழர் கே.எஸ். கிருஷ்ணப்பா மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல் தெரிவித்துள்ளது. இதுகுறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் கிருஷ்ணகிரி மாவட்ட முன்னோடியும், மூத்த தலைவருமான தோழர் கே.எஸ். கிருஷ்ணப்பா 11.05.2025 அன்று, உத்தனப்பள்ளி அருகில் உள்ள குருபரபள்ளியில் அவரது சகோதரி வீட்டில் காலமானார். தோழர் "கேஎஸ்கே" என அன்புடன் அழைக்கப்படும் கே.எஸ். கிருஷ்ணப்பா, சிறு வயதிலேயே இடதுசாரி கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு விவசாயிகள் சங்கத்தில் இணைந்து செயல்பட்டு வந்தவர்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் ஒன்றுபட்ட தருமபுரி மாவட்டக் குழு உறுப்பினர், கிருஷ்ணகிரி மாவட்டக் குழு உறுப்பினர், மாநிலக் குழு உறுப்பினர் போன்ற பொறுப்புகளில் சிறப்பாகச் செயல்பட்டவர். தோழர் கிருஷ்ணப்பாவின் வாழ்விணையர் திருமதி செங்கொடி, கட்சியின் தத்துவார்த்த அரசியல் தெளிவு பெற்றவர். ஆசிரியராகப் பணியாற்றி வந்தவர். சில வருடங்களுக்கு முன்பு காலமானார். இவர்களுக்கு விப்லவ வாணி, தனா என இரண்டு மகள்கள் இருக்கின்றனர்.

கிருஷ்ணப்பாவின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்வதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மத்திய சென்னை மாவட்ட ஆய்வுக் கூட்டம்



தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மத்திய சென்னை மாவட்ட கிளைகள் ஆய்வுக் கூட்டம், அம்பத்தூர் சங்க அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் வி.சாக்ரடீஸ் தலைமையில் மாவட்டச் செயலாளர் இரா.துரைசாமி அறிமுக உரையாற்றினார்.

இதில் மாநிலப் பொதுச் செயலாளர் கோவை என்.செல்வராஜ், ஏஐடியுசி மாநிலத் துணைத் தலைவர் ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ் எம்.எல்.ஏ, சிபிஐ அம்பத்தூர் பகுதிச் செயலாளர் இரா.விஜயகுமார், ஆட்டோ சம்மேளனப் பொதுச்செயலாளர் ப.மாரியப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்டப் பொருளாளர் வி. சுஜாதா நன்றி கூறினார். கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் கிளை நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# சமூக நல்லிணக்கச் சீர்குலைவிற்குக் காவல் துறையின் அலட்சியமே காரணம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்**

வடகாடு பகுதியில் சமூக நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் செயலுக்குக் காவல் துறையின் அலட்சியம்தான் காரணமாகும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகில் உள்ள வடகாடு கிராமத்தில், கடந்த 05.05.2025 அன்று, சமூகப் பொறுப்பற்ற சிலர், தங்களது இருசக்கர வாகனங்களுக்கு யார் முதலில் பெட்ரோல் போடுவது என்று, குடிபோதையில் செய்து கொண்ட தகராறு வன்மையாகக் கண்டிக்கதக்கது. இந்தத் தகராறு நடைபெற்ற இடத்தில் காவல்துறையினர் வாய்மூடி மௌன சாட்சியாக நின்று இருந்தனர் என்பது வெட்கப்பட வேண்டிய செயலாகும்.

தகராறு செய்து கொண்டதில் ஒரு பிரிவினர், சாதிய ஆதிக்க வெறியுடன், மற்றவர்களுக்குத் தவறான தகவல் கொடுத்து, ஆட்களைத் திரட்டிக் கொண்டு, பட்டியலினச் சமூகப் பிரிவு மக்கள் மீதும், குடியிருப்பு மீதும் பெரும் தாக்குதல் நடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதில் ஒரு கூரை வீடு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. அரசுப் பேருந்தின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. சிலர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் கைமீறிச் சென்றதற்குக் காவல் துறையின் அலட்சியமும், செயலற்ற நிலையும்தான் முக்கியக் காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பாக விசாரித்துத் தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்கு அடைக்கலம் காத்த அய்யனார் கோவில் பொங்கல் விழா பிரச்சனையும், அது தொடர்பான வழக்கும் நிலுவையில் இருப்பது, அவ்வப்போது ஏற்படும் மோதலுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. இதன் மீது விரைந்து தீர்வு காண மாவட்ட நிர்வாகம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். உடனடியாக ஒரு அமைதிக் குழு அமைத்துச் சட்டம் ஒழுங்கு, சமூக அமைதியை உறுதி செய்ய வேண்டும்.

இந்தச் சம்பவத்தில் முற்றிலும் எரிந்து போன வீட்டைப் புதுப்பித்து, அரசு செலவில் கட்டிக் கொடுக்க வேண்டும். வீடுகள், வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதாரத்திற்கு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் படி இழப்பீடு வழங்க வேண்டும். குடிபோதையில் தகராறு செய்வதில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, அனைவரும் கைது செய்யப்பட்டுச் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடாமல் தண்டனை பெற்றுத் தர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு, தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# வைரமுத்து தாயார் அங்கம்மாள் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



கவிப்பேரரசு வைரமுத்து தாயார் அங்கம்மாள் மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் தாயார் அங்கம்மாள், 10.05.2025 அன்று காலமானார் என்ற செய்தி கேட்டு வேதனையுற்றோம்.

தேனி அருகில் உள்ள மேட்டூர் கிராமத்தில் விவசாயி ராமசாமி குடும்பத்தில் வாழ்க்கை பட்டவர் அங்கம்மாள். வைகை அணை கட்டப்பட்ட காலத்தில் மேட்டூர் கிராமம் புலம் பெயர்ந்து வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டதால் வடுகபட்டியில் குடியேறினர். "கள்ளிக்காட்டு இதிகாசம்" என்ற படைப்பில் நெஞ்சுருகப் பதிவு செய்துள்ளார் கவிப்பேரரசு.

தமிழின் பெருமை காக்க வந்த பிள்ளையைப் பெற்று வளர்த்த பெருமை கொண்டவர் அங்கம்மாள். வயதுமூப்பு, உடல் நலிவு காரணமாக காலமானார். அன்னையை இழந்து தவிக்கும் வைரமுத்து அவர்களைக் காலம்தான் ஆற்றுப்படுத்தித் தேற்ற வேண்டும். அன்னை அங்கம்மாள் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## நீட் தேர்வு தொடரும் உயிரிழப்புகள்

# தமிழ்நாட்டிற்கு விலக்களிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

மருத்துவப் படிப்பில் மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வினால் உயிரிழப்புகள் தொடர்கின்றன. எனவே, தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து உடனடியாக விலக்களிக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

நீட் தேர்வுகாரணமாகமருத்துவப்படிப்பில் மாணவர் சேர்க்கை பாதிக்கப்படுவதால், தமிழ்நாடு நீட் தேர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. பள்ளி இறுதி வகுப்பில் நல்ல மதிப்பெண் பெறும் மாணவ, மாணவிகள் நீட் தேர்வு அச்சம் காரணமாக தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள். நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பாஜக ஒன்றிய அரசு பிடிவாதமாக மறுத்து வருவதால், அரியலூர் அனிதா முதல் மேல்மருவத்தூர் அருகில் உள்ள அகிலி கிராமத்தின் காயத்திரி வரை 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல் மத்தியப்பிரதேசத்தில் இருந்து ராஜஸ்தானுக்கு நீட் தேர்வு எழுத வந்த மாணவி இரவு படுக்கைக்குச் சென்றவர் விடியும் முன்பு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மனித உயிர்களைக் காவு வாங்கும் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்களிக்க வேண்டும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இருமுறை தீர்மானம் நிறைவேற்றி, குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டும், ஒன்றிய அரசு அசைந்து கொடுக்கவில்லை. 04.05.2025 அன்று நீட் தேர்வு மையங்களில் மாணவ, மாணவிகள் நடத்தப்பட்ட விதம் நாகரிகச் சமூகத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. உயிருக்கும் மேலாக கருதும் "தாலியை" கழட்டி வைக்க வேண்டும் என்பது தமிழர் மரபுக்கும், பண்பாட்டிற்கும் எதிரானது. சட்டை பட்டன்கள் கூட எண்ணிப் பார்த்து அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தேர்வுமையத்தில் நுழையும் முன்பாகவே பதற்றத்தையும், படபடப்பையும் உருவாக்கிய அடக்குமுறையைக் கட்சியின் மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், இனியும் தாமதிக்காமல் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்களிக்க வேண்டும் என பாஜக தலைமையிலான ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

என்பது எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகத் தெரியவில்லை. ஆனால், எந்த வகையிலான சட்டங்களோ, விதிகளோ, முறைமைகளோ இல்லாத போதிலும், இத்தகையதொரு ஒதுக்கீட்டினை உச்ச நீதிமன்றம் உருவாக்கிக் கொடுத்துவிட்டது.

தமிழ்நாட்டு மாணவர்கள் வேறு மாநிலங்களில் உள்ள 15% ஒதுக்கீடுகளைப் பெற முடியும் என்றாலும், எதிர்காலத்தில் தாங்கள் படித்த மாநிலங்களில் பணிபுரியும் நிலையில் இல்லாதோர் பிற மாநிலங்களுக்குச் செல்வதில் பயன் எதுவும் இருக்கப்போவதில்லை. அத்துடன், தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரிகளும் இடங்களும் மிகுதி. இதனால், தமிழக மாணவர்கள் தங்கள் வாய்ப்புகளைப் பெரிதும் இழக்கின்றனர் என்பதில் அய்யமில்லை.

தன்நிதித் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 65% இடங்களைத் தகுதி அடிப்படையில் கலந்துரையாடல் வழியாக அரசு நிரப்புகிறது. எஞ்சியுள்ள 35% இடங்கள் மேலாண்மையினரின் ஒதுக்கீடாகக் கருதப்பட்டு மதிப்பெண்களின் அடிப்படையில் நிரப்பப்படுகின்றன. இருந்தாலும் மதிப்பெண்கள் குறைவாகப் பெற்ற வளமான பகுதியினரே பயன் பெறுகின்றனர்.

மருத்துவக் கல்விக்குத் தகுதிதான் அடிப்படை என்றால், மேலான்மையினர் ஒதுக்கீடு ஏன் என்பதற்கு உச்ச நீதிமன்றத்திடம் விளக்கங்கள் இல்லை.

கல்விக் கட்டணம் மிகுதியாக இருப்பதால் இந்த இடங்களில் ஏழை எளிய ஊரகப் பகுதியினர் சேர முடிவதில்லை. இதனால் தனியார் கல்லூரிகளில் உள்ள அனைத்து இடங்களும் பெரிதும் வளமான மாணவர்களுக்கான ஒதுக்கீடு போலவே அமைந்துவிடுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

இவையன்றி, இந்திய ஒன்றியம் முழுதும் 59 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் மருத்துவப் படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன. இவற்றில் 14 தமிழ்நாட்டுக்குள் இருக்கின்றன.

நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் என அழைக்கப்படும் அனைத்தும், தனியார் தன்நிதிக் கல்லூரிகளாகத் தொடங்கப்பட்டவைதாம். பின்னர், பல்கலைக்கழக நிதி நல்கை ஆணையத்தால் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாக மகுடம் சூட்டப்பட்டவை அவை.. இருந்தாலும், இவை தமிழக அரசின் சேர்க்கை முறை, இட ஒதுக்கீடு ஆகிய அனைத்துக்கும் அப்பாற்பட்டுத் தனி உரிமையுடன் நடந்துகொள்கின்றன.

ஒன்றிய அரசினால் நடத்தப்படும் சேர்க்கை முறையில் இவற்றுக்கும் இட ஒதுக்கீடும்நுழைவுத்தேர்வுமதிப்பெண்களும் பொருந்தும் என்றாலும், தனியார் தன்நிதிக் கல்லூரிகள் போன்று கட்டணங்களைக் கொண்டிருப்பதால் ஏழை எளிய ஊரக மாணவர்கள் அங்கு இடம் பெறக்கூடிய நிலைமைகள் உருவாகவில்லை.

நுழைவுத்தேர்வுமதிப்பெண்கள் அடிப்படை என்பது தனியார் தன்நிதிக் கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் ஆகிய அனைத்துக்கும் பொருந்தும் என்றாலும், கட்டணப் பெருக்கத்தினால் வளமானோரே வாய்ப்புகளைத் தட்டிப்பறித்துக்கொள்கின்றனர்.

மேலும், கட்டண மிகுதியால் இங்கு பல இடங்கள் நிரப்பப்படாமல் இருந்துவிடுகின்றன. இதனால், அந்த இடங்களை நிரப்புவதற்காக ஒவ்வொரு ஆண்டும் நுழைவுத் தேர்வில் பெறவேண்டிய குறைந்த அளவு தகுதி மதிப்பெண் குறைக்கப்பட்டு வருகிறது. குறைந்த அளவு நுழைவுத் தேர்வு மதிப்பெண் எனத் தகுதி அளவு குறிக்கப்பட்டிருந்தாலும், அவை விருப்பம் போலக் குறைக்கப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் வெறும் 0 மதிப்பெண் பெற்றிருந்தோரும் மருத்துவக் கல்லூரிகளில் சேர முடிந்தது. உச்ச நீதிமன்றமும் இதற்கு ஒப்புதல் தருகிறது.

ஆனால், உரிய மதிப்பெண் பெற்றிருந்தாலும் ஏழை எளியோருக்கு மருத்துவக் கல்வி என்பது கனவாகவே கடந்து விடுகிறது.

இதுதான் உண்மை நிலை என்றால், தொடர்பில்லாத பாடத்திட்டத்தைப் பயின்று காலத்தை வீணடித்து, பொருள் செலவினை ஏற்றுக்கொண்டு, அதற்காக நுழைவுத் தேர்வினை நாடகம் போல் ஏன் நடத்தவேண்டும் என்ற வினா எழுவது இயற்கை.

வளம் கொண்டோர் தகுதி அடிப்படையில்தான் மருத்துவக் கல்லூரியில் சேருகிறார்கள் என்பதாகக் காட்டிக் கொள்ளவே இந்த நீட் நாடகம் அரங்கேற்றப்படுகிறது. பயிற்சியகங்கள், தனியார் மருத்துவ நிறுவனங்களின் கொள்ளைக்காகவே நடத்தப்படுகின்றன.

நுழைவுத் தேர்வு இல்லாத காலத்தில் பன்னிரண்டாவது வகுப்பில் குறைந்தது 60% மதிப்பெண்கள் பெற்றிருந்தால்தான் மருத்துவக் கல்லூரியில் சேர முடியும் என்ற ஒரு வரையறை இருந்தது. இது இப்போது உச்சநீதிமன்றத்தின் ஒப்புதலோடு முறியடிக்கப்பட்டுவிட்டது. நுழைவுத் தேர்வு எழுதினால் மட்டும் போதும் என்ற நிலைக்குத் தரம் தாழ்த்தப்பட்டுள்ளது.

'நுழைவுத் தேர்வு கூடாது' எனத் தமிழ்நாட்டின் ஒன்றுபட்ட குரலாகப் பெரிதும் ஓங்கி ஒலிப்பது, அதோடு நின்றுவிடக்கூடாது. இதனால் மட்டுமே சமூக நீதிக்கான வாய்ப்புகள் உருவாகாது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். இவற்றுக்கு மேலாக அடுத்த கட்டத்துக்குச் செல்லவேண்டும்.

1. தகுதி இல்லாதோருக்கு வாய்ப்பளிக்கும் நுழைவுத் தேர்வில் உண்மையும் நேர்மையும் இல்லாததால், அது நீக்கப்படவேண்டும்

2. சட்டத்தின் அடிப்படையில் இல்லாமல், உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பினால் மட்டும் ஏற்படுத்திய 15% அனைத்திந்திய ஒதுக்கீட்டு முறை நிறுத்தப்படவேண்டும்

3. அரசுக் கல்லூரிகளில் மட்டுமல்லாது, தன்நிதிக் கல்லூரிகள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் அனைத்து மருத்துவ இடங்களும் 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மட்டுமே நிரப்பப்படவேண்டும்

4. நுழைவுத் தேர்வினை நீக்குவதன் வழியாக, தன்நிதி மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழக மருத்துவ இடங்களை விருப்பம்போல் நிரப்பிக்கொள்ள வாய்ப்புகளை வழங்கிவிடக்கூடாது. அரசு முடிவு செய்யும் கட்டணங்களுக்கு மேலாக மிகு தொகை பெறுவது தடுக்கப்படவேண்டும்

5. தமிழ்நாட்டில் 45% பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் பயில்வதால், அவர்களுக்கான ஒதுக்கீட்டினை மேலும் மிகுதிப்படுத்தவேண்டும்.

நுழைவுத் தேர்வு வருமுன் தமிழ்நாட்டில் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் சேர்க்கை நடந்து வந்தபோது ஒன்றியப் பாடத்திட்ட மாணவர்கள், தாங்கள் தமிழ்நாட்டின் பாடத்திட்டத்தில் படித்தோர் அளவுக்கு மதிப்பெண்கள் பெற இயலவில்லை என்னும் நிலையினைச் சுட்டிக்காட்டி, இதனால் மருத்துவம், பொறியியல் போன்றவற்றில் தங்களுக்கு வாய்ப்புகள் குறைகின்றன என்று சென்னை உயர்நீதிமன்றத்தை நாடினர். அப்போது ஒன்றியப் பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு மதிப்பெண்களைச் சீராக்கித்தரும் திட்டத்தினை உயர்நீதிமன்றம் வகுத்து, அவர்களுக்குச் சில புள்ளிகள் சேர்க்கப்பட்டன.

அய்.அய்.எம். எனும் உயர் மேலாண்மை நிறுவனங்களில்கூட, பொறியியல் படிப்பு அல்லாதோர் மற்றும் மகளிர் போன்றோருக்குச் சேர்க்கையில் கூடுதல் மதிப்பெண் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

இவை போன்று, தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்கள் பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, 7.5% ஒதுக்கீட்டுக்கு அப்பால் மதிப்பெண்கள் சீராக்குதல் என்ற அளவில் கூடுதலாக மதிப்பெண் புள்ளிகள் வழங்கப்படவேண்டும்.

சமூகநீதியினைப்புறக்கணித்துவிட்டால், நுழைவுத் தேர்வு இருந்தாலும் இல்லையென்றாலும் பயன்கள் அனைத்தும் பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்காமல் போகும். இதனையும் மறந்துவிடக்கூடாது.

**தொடர்புக்கு : 9444075561**

# விவசாயச் சங்க மாநிலக் குழுக் கூட்டம்




தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக் குழுக் கூட்டம் 11.5.2025 அன்று திருவாரூரில் மாநிலத் துணைத் தலைவர் சி.எம்.துளசிமணி தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி முன்வைத்த அறிக்கைகள் விவாதத்திற்குப் பின் ஏற்கப்பட்டன. இக்கூட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர் கே.உலகநாதன் முன்.எம்எல்ஏ, பொருளாளர் அயிலை.சிவசூரியன், துணைச் செயலாளர் வி.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட மாநிலக் குழு உறுப்பினர்கள் பங்கு கொண்டனர். இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணைய நெல் கொள்முதல் திட்டத்தைக் கைவிட்ட தமிழக அரசுக்குப் பாராட்டு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு முழுவதும் விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்முதல் செய்து வரும் நிலையில், தமிழ்நாட்டில் மத்திய தொகுப்புக்கான அரிசித் தேவைக்கு ஒன்றிய அரசே, தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையம் மூலம் இனி நெல் கொள்முதல் செய்யும் என அறிவித்தது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் இந்தக் கொள்முதல் திட்டத்தை அனுமதிக்க முடியாது எனத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. ஏனெனில் கொள்முதல் மற்றும் விநியோகப் பணிகளை மேற்கொள்ளும் தனியார்களிடம் விவசாயிகள் அகப்பட்டுக் கொள்வர் என்பதால் இதை எதிர்த்தோம்.

இந்தச் சூழலில் டெல்டா மாவட்டங்கள் தவிர, பிற மாவட்டங்களில் மட்டும் கூட்டுறவு இணையம் கொள்முதல் செய்யும் என்ற நிபந்தனையை தமிழ்நாடு அரசு அறிவித்தது. தமிழகத்தில் இந்தக் கொள்முதல் முறையை முற்றாக அனுமதிக்கக் கூடாது என்று சென்னையில் நடந்த கூட்டத்தில், உணவுத்துறை அமைச்சரிடம், சங்க நிர்வாகிகள் வலியுறுத்திய போது, டெல்டா மாவட்டங்களில் கூட்டுறவு இணையம் கொள்முதல் செய்யாது என உறுதிப்படக் கூறினார். இந்தக் கொள்முதல் திட்டத்தை முழுவதுமாக நிராகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

நமது சங்கம் அச்சப்பட்டது போலவே, இணையம் கொள்முதல் செய்த நெல்லுக்கு சுமார் 257 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கிடவில்லை என வந்த செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

எனவே, ஒன்றிய அரசின் நுகர்வோர் கூட்டுறவு இணைய நெல் கொள்முதல் திட்டத்தைக் கைவிடும் வரை போராட்டங்களை நடத்திட மாநிலக் குழு திட்டமிட்டிருந்த நிலையில், தமிழகத்தில் தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையம் மூலம் மேற்கொண்ட நெல் கொள்முதல் திட்டத்தை இனி அனுமதிக்க மாட்டோம் என அறிவித்துள்ளதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக் குழுக் கூட்டம் வரவேற்கிறது.

குறுவை சாகுபடியை உரிய காலத்தில் மேற்கொள்ள ஜூன் 12 மேட்டூர் அணை திறக்க வேண்டும், குருவை விவசாயப் பணிகளுக்கு ஜூன் 12 மேட்டூர் அணை திறக்கப்படும் என சட்டமன்ற கூட்டத்தில் அமைச்சர் அறிவித்தார். மேட்டூர் அணையில் உரிய அளவு நீர் இருப்பு உள்ளது. மே மாத 20 அளவில் தென்மேற்குப் பருவமழை தொடங்கிவிடும் என வானிலை ஆய்வு நிலையமும் அறிவித்துள்ள நிலையில், மேட்டூர் அணையை ஜூன் 12 அன்று திறந்திட வேண்டும். டெல்டாவில் பாசனம் மற்றும் வடிகால் தூர்வாரும் பணிகளை மே 30க்குள் கட்டாயம் முடித்திட வேண்டும். இது குறித்து சிறப்புக் கள அலுவலர்கள் ஆய்வையும் மேற்கொள்ள வேண்டும்.

குருவை சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்ள உதவியாக டெல்டா மாவட்டங்களுக்கு, சிறப்புத் தொகுப்புத் திட்டப் பொருட்களையும், பிற மாவட்டங்களுக்குத் தொகுப்பு நிதி உதவியையும் கொடுக்க உள்ளதாக அமைச்சர் கூறியுள்ளதை வரவேற்கிறோம். எனவே, டெல்டா மாவட்டங்களுக்குச் சிறப்புத் திட்டத் தொகுப்புப் பொருட்களாகவும், டெல்டா அல்லாத மாவட்டங்களுக்குச் சிறப்புத் தொகுப்பு நிதி மானியமாகவும் வழங்கிடும் அறிவிப்பை மறு ஆய்வு செய்து, உழவு மானியம், விதை மானியம், நடவு மானியம், இடுபொருள் மானியம் வழங்கும் சிறப்புத் திட்டத்தில் தொகுப்புப் பொருட்களாக இல்லாமல், தொகுப்பு நிதி வழங்கும் திட்டமாக அதனை அறிவித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரசின் பொதுத்துறை வேளாண் பயிர்க் காப்பீடு திட்டத்தை அமல்படுத்திட காலத்தில் உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக் குழு கேட்டுக் கொள்கிறது.

## மாநாடு வரவேற்புக் குழுவிற்குப் பாராட்டு

நாகப்பட்டினத்தில் நடைபெற்ற அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தேசிய 30வது மாநாட்டின் வெற்றிக்குப் பாடுபட்ட அனைவருக்கும் சங்க மாநிலக் குழு பாராட்டி நன்றி கூறப்பட்டது.

# கவுண்டமணி வாழ்விணையர் சாந்தி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



நகைச்சுவை நடிகர் கவுண்டமணி வாழ்விணையர் சாந்தி மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் திரையுலகின் மூத்த காமெடி நடிகர் கவுண்டமணியின் வாழ்விணையர் சாந்தி (67) 05.05.2025 அன்று காலமானார் என்ற செய்தி ஆழ்ந்த வேதனை அளிக்கிறது. தமிழ்த் திரையுலகில் அரை நூற்றாண்டுக்கும் மேலாகப் பயணித்து வருபவர் கவுண்டமணி, இவரும், இவரது சக நடிகருமான செந்திலும் இணைந்து வழங்கியுள்ள நகைச்சுவைக் காட்சிகள் தனிச் சிறப்பு பெற்று நிற்பவை.

கவுண்டமணியின் திரையுலக வாழ்க்கையின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றியவர், அவரது காதல் மனைவி சாந்தி. இவர் சில ஆண்டுகளாக தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமாகி விட்டார். இவரது இழப்பு எளிதில் ஆற்றுப்படுத்த முடியாத துயரமாகும். அன்னாரது மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து வாடும் கவுண்டமணி மற்றும் அவரது மகள்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## தருமபுரி மாவட்ட துணைச் செயலாளர்

# கா.சி.தமிழ்க்குமரன் உடலுக்கு இரா.முத்தரசன் நேரில் அஞ்சலி



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன் 7.5.2025 அன்று திருப்பூரில் மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்தார். அவரது உடல் அவரது சொந்த ஊரான தருமபுரி மாவட்டம், அரூர் அருகே உள்ள நாசன்கொட்டாய் கிராமத்திற்குக் கொண்டுவரப்பட்டு அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. அங்கு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நேரில் அஞ்சலி செலுத்தினார்.

இதில் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநிலச் சிறப்புத் தலைவர் ந.நஞ்சப்பன் எக்ஸ் எம்.எல்.ஏ, கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் தருமபுரி கலைச்செல்வம், சேலம் மோகன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன்,

தமிழ்நாடு விவசாயச் சங்க மாநிலத் துணைத் தலைவர் எம்.லகுமய்யா, திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ் மற்றும் தருமபுரி மாவட்டக் குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள், அனைத்து அரசியல் கட்சியினர் திரளாக அஞ்சலி செலுத்தினார்கள்.

# அனைத்துப் போக்குவரத்துத் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம்

ஒன்றிய மோடி அரசு மக்களுக்கு சேவை செய்கின்ற போக்குவரத்து, மின்சாரம், சுரங்கம், ரயில்வே, ராணுவப் பாதுகாப்புத் தளவாட உற்பத்திச் சாலை, வங்கி, இன்சூரன்ஸ் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு வார்ப்பது உள்ளிட்ட கொள்கைகளைக் கண்டித்து, மே 20 அன்று நடைபெறும் வேலை நிறுத்தத்தை விளக்கி, அரசு போக்குவரத்துக் கழகங்களில் செயல்படும் அனைத்துத் தொழிற்சங்கங்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் ஜெகமாலைபுரம் அரசுப் போக்குவரத்துக் கழக கிளை முன்பு, சிஐடியு மத்திய சங்கத் தலைவர் த.காரல் மார்க்ஸ், ஏஐடியுசி பொதுச்செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக சிஐடியு தலைவர் எஸ்.செங்குட்டுவன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிஐடியு மாநிலச் செயலாளர் சி.ஜெயபால், மாவட்ட துணைச் தலைவர் கே.அன்பு, ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் துரை.மதிவாணன், ஏஐசிசிடியு மாவட்ட தலைவர் கே.ராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




**ஆரணி**: ஆரணி பணிமனை முன்பு பிரச்சார இயக்கம் ஏஐடியூசி வி.குப்புரங்கன் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் த.ராசேந்திரன், சிஐடியு முரளி, யுடியுசி பஞ்சமூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர். ஆர்.சேகர் நன்றி கூறினார்.

## பண்ணைத் தொழிலாளர்களைப்

# பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி தஞ்சையில் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு அரசு பண்ணை மற்றும் வேளாண்மைப் பல்கலைக்கழகப் பண்ணைத் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில், வேளாண்மைத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி, 9.5.25 அன்று தஞ்சாவூர் தலைமை அஞ்சலகம் முன்பு, சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் உ.அரசப்பன் தலைமை வகித்தார். மாநிலத் துணைத் தலைவர் தி.திருநாவுக்கரசு முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தினை ஏஐடியுசி தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.சந்திரகுமார் துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட தலைவர் வெ.சேவையா ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் இயங்கும் விதைப்பண்ணைகள், எண்ணை வித்துப் பண்ணைகள், பயிறு வகைப் பண்ணைகள் மற்றும் தென்னை நாற்றுப் பண்ணைகளில் வேலை செய்யும் தினக்கூலித் தொழிலாளர்களை, 2006 பட்டியலில் பெறப்பட்ட அடிப்படையில் பணி நிரந்தரம் செய்திட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய, நகர, கிளை, மாநாடுகள்



வத்திராயிருப்பு



அவினாசி



குடியாத்தம்



கம்பம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய கிளை நகர மாநாடுகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

**வத்திராயிருப்பு நகர மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு நகர மாநாடு பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. பாண்டி கொடியை ஏற்றினார். மகாலிங்கம் அஞ்சலித் தீர்மானத்தை வாசித்தார். மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இன்றைய அரசியல் நிலையை விளக்கிப் பேசினார். தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம், மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், நிர்வாகக் குழு உறுப்பினர் பொன்னுபாண்டியன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பகத்சிங், வட்டச் செயலாளர் கோவிந்தன் ஆகியோர் பேசினார்கள்.

நகரச்செயலாளராக காளீஸ்வரன், துணைச் செயலாளர்களாக கோபால், பெரியசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். புறவழிச் சாலை வேலைத் திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும், தாமிரபரணி குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**அருப்புக்கோட்டை ஒன்றியம்:** விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை ஒன்றிய 25வது மாநாடு சண்முகவேல், கரியமால் ஆகியோர் தலைமையில். மூத்ததோழர் முருகேசன் கொடி ஏற்றினார். இளங்கோ வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசினார். மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார், மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன், மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ நிறைவுரையாற்றினார். இதில் செயலாளராக கரியமால், துணைச் செயலாளராக வழக்கறிஞர் தோப்பூர் சாமி, பொருளாளராக சங்கரநாராயணன் தேர்வு செய்யப்பட்டனர்.

அருப்புக்கோட்டையில் தெருநாய்த் தொல்லைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும், ஒன்றியத்தில் உள்ள அனைத்துக் கண்மாய்களையும் தூர்வார வேண்டும், பந்தல்குடி ஊருக்குள் நான்கு வழிச் சாலையில் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் வந்து செல்ல வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**குடியாத்தம் மேற்கு ஒன்றிய மாநாடு:** வேலூர் மாவட்டம் குடியாத்தம் மேற்கு ஒன்றிய மாநாடு குடியாத்தம் ஜீவா நகரில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் ஏ.டி.சுந்தரேசன் ஏற்றினார். ஆர்.அக்பர் அஞ்சலித் தீர்மானத்தை வாசித்தார். ஒன்றிய துணைச் செயலாளர் கருணாநிதி வரவேற்புரை ஆற்றினார். மாவட்டச் செயலாளர் ஜி.லதா துவக்க உரையாற்றினார்.

ஒன்றியச் செயலாளராக கே.சி.பிரேம்குமார், துணைச் செயலாளராக எஸ்.மகேஷ்பாபு, பொருளாளராக ஆர்.அக்பர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட துணைச் செயலாளர் துரைசெல்வம், மாநிலக் குழு உறுப்பினர் எல்.மணி, குடியாத்தம் ஒன்றியச் செயலாளர் டி.ஆனந்தன், பேரணாம்பட்டு ஒன்றியச் செயலாளர் எஸ்.பன்னீர்செல்வம், தெற்கு ஒன்றியச் செயலாளர் வே.குமார் மாவட்டக் குழு உறுப்பினர் ஜி.எஸ்.மூர்த்தி சிறுபான்மை தேசியக் குழு உறுப்பினர் அத்தாவுல்லா உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

குடியாத்தம் கவுண்டன்ய நதி கரையோரத்திலிருந்து வெளியேற்றப்பட்ட, வீடு இழந்தவர்களுக்கு உடனடியாக வீடு கட்டித் தர வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**அம்பை ஒன்றிய மாநாடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நெல்லை மாவட்டம் அம்பைசேரை ஒன்றிய 31வது மாநாடு 10.05.2025 அன்று பி.கண்ணன் தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் என்.பெரியசாமி எக்ஸ் எம்.எல்.ஏ, மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன், மாவட்டத் துணைச் செயலாளர் ஏ.சேதுராமலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வி.கல்யாண சுந்தரம் நன்றி கூறினார். மாநாட்டில் ஒன்றியச் செயலாளராக பி.முருகன், ஒன்றியத் துணைச் செயலாளராக வி.வடிவேல், ஏ.சுப்பிரமணியன், பொருளாளராக பி.கண்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

அம்பைப் பகுதியில் இளைஞர் மற்றும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட சிப்காட் அமைத்திடவேண்டும், அகஸ்தியர் அருவில் குளிப்பதற்குக் கட்டணம் வசூலிப்பதைக் கைவிட வேண்டும், அம்பைப் பகுதியில் விவசாய விளைபொருட்களைப் பாதுகாத்திட குளிர்ப்பதனக் கிடங்கு அமைத்திட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**அவினாசி ஒன்றிய மாநாடு:** அவினாசி ஒன்றிய 21வது மாநாடு 11.05.2025 அன்று பி.அர்ஜுனன், ஆர்.ஷாஜஹான், ஏ.பேபி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் ஆர்.ரங்கசாமி ஏற்றிவைத்தார். அஞ்சலித் தீர்மானத்தை வி.கோபால் முன்மொழிந்தார். மாநாட்டை மாவட்ட துணைச் செயலாளர் எம்.மோகன் துவக்கி வைத்தார்.

கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி சிறப்புரை ஆற்றினார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வி.சௌந்தரராஜன் வாழ்த்திப் பேசினார். மாவட்டச் செயலாளர் கே.எம்.இசாக் மாநாட்டை நிறைவு செய்து பேசினார். மாநாட்டில் செயலாளராக இரா.முத்துசாமி, துணைச் செயலாளராக பி.அர்ஜுனன், பொருளாளராக என்.செல்வராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**கம்பம் நகர மாநாடு:** கட்சியின் கம்பம் நகர 9 வது மாநாடு கட்சி அலுவலகத்தில் ஜி.வீரவாஞ்சிநாதன், ஆர்.ராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. ஏ.பாலு கொடி ஏற்றினார். எம்.வி.கே.மணிகண்டன் அஞ்சலித் தீர்மானம் வாசித்தார். எம்.வி.கல்யாண சுந்தரம் வேலை அறிக்கையை முன்வைத்தார்,

மாவட்டச் செயலாளர் கே.பெருமாள், மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன், மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.பி.ராஜ்குமார், வி.பாண்டி, இரா.தமிழ்பெருமாள், கம்பம் ஒன்றியச் செயலாளர் எஸ்.மதனகோபால் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். இதில் நகரச் செயலாளராக எம்.வி.கே.ராஜசேகர், துணைச் செயலாளராக எம்.வி.கே.மணிகண்டன், ஏ.ஜினுமுகமது, பொருளாளராக எஸ்.சித்திக் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**மகசின்புரம் கிளை மாநாடு:** வடசென்னை மாவட்டம், பெரம்பூர் தொகுதி மகசின்புரம் கிளை மாநாடு மு.கார்த்திகேயன் நினைவு அரங்கத்தில் கா.ராஜாராம் தலைமையில் நடைபெற்றது. மூத்ததோழர் இரா.ஞானசேகரன் கொடியேற்றினார். பெரம்பூர் தொகுதி குழு உறுப்பினர் சந்தோஷ் குமார் அஞ்சலித் தீர்மானத்தை முன்மொழிந்தார். மாநிலக் குழு உறுப்பினர் லி.உதயகுமார் மாநாட்டைத் துவக்கி வைத்தார். பொறுப்பாளர் காத்தவராயன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சுப்பிரமணி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். தொகுதிச் செயலாளர் கோட்டி சுரேஷ் மாநாட்டை நிறைவு செய்து பேசினார்.

இதில் செயலாளராக இரா.பார்த்திபன், துணைச் செயலாளராக தேசிகானந்தம், லி.பாலச்சந்தர், பொருளாளராக கோவிந்தன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# மாமேதை காரல் மார்க்ஸ் 207வது பிறந்த நாள் விழா


வத்திராயிருப்பு


சேலம்

**வத்திராயிருப்பு:** வத்திராயிருப்பில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கார்ல் மார்க்ஸ் படத்திற்கு மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தப்பட்டது. தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வட்டச் செயலாளர் கோவிந்தன், பேரூராட்சித் தலைவர் தவமணி பெரியசாமி, மாதர் சங்க மாவட்டச் செயலாளர் பாண்டிச்செல்வி, தவிச சவுந்திரபாண்டியன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**சாத்தூர்:** விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் தகஇபெ சார்பில் கார்ல் மார்க்ஸ் படத்திற்கு மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தப்பட்டது. மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன் தலைமை வகித்தார். மாநிலப் பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம் சிபிஐ மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், வட்டச் செயலாளர் சுவாமிநாதன், நகரச் செயலாளர் ஜான் ராஜா, கிளைச் செயலாளர் கணேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சேலம்:** கட்சியின் சேலம் மாவட்டக் கட்சி அலுவலகத்தின் முன்பு, மாவட்ட துணைச் செயலாளர் எம்.ராமன் தலைமையில், காரல் மார்க்ஸ் படத்திற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஏ.கந்தன் மாலை அணிவித்தார். இதில் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எஸ்.பி.கே. ராமசந்திரன், எஸ்.தனகோட்டி, இரா.ரமேஷ், மாணவர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் பா.நேதாஜி, ஈ.ஆர்.கே மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வடசென்னை:** மாமேதை காரல் மார்க்ஸ் 207வது பிறந்த தினம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்டம் ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர் எம்.ஜெய்சங்கர் தலைமையில் 38வது வட்டத்தில் நடைபெற்றது.

கட்சியின் வடசென்னை மாவட்ட முன்னாள் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி சிறப்புரை ஆற்றினார். மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, பகுதி துணைச் செயலாளர் ஜி.இராஜசேகர், மாவட்டக் குழு உறுப்பினர் ஜி.எல்.சீனிவாசலு மற்றும் லைட் மோட்டார்ஸ் வெயிகள் அசோசியேசன் தோழர்கள் திரளாகப் பங்கேற்று மலர்த் தூவி செவ்வஞ்சலி செலுத்தினார்கள்.

# கிருஷ்ணகிரியில் மாற்றுக் கட்சியினர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்



கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் வட்டத்தில் ஒப்புதவாடி ஊராட்சியில் சின்ன கோட்டூரில் வீரபத்திரன் தலைமையில் 40 பேர், சிகரளப் பள்ளி பஞ்சாயத்தில் ராஜேந்திரன் தலைமையில் 30 பேர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் எஸ்.கண்ணு மத்திய, மாநில அரசியல் நிலை குறித்துப் பேசினார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ராமமூர்த்தி, மாவட்டக் குழு உறுப்பினர் மோகன், விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, பரமசிவம், பூபேஷ், பவுன், சதீஷ் ஆகிய வட்டக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். சின்ன கோட்டூர் கிளைச் செயலாளராக வீரபத்திரன், துணைச் செயலாளராக கண்ணையன், பொருளாளராக ராமமூர்த்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். சிகரளபள்ளி கிளைச் செயலாளராக ராஜேந்திரன், துணைச் செயலாளராக நாகராணி, பொருளாளராக முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பேரூராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து வேடசந்தூரில் ஆர்ப்பாட்டம்



கேஸ் விலை உயர்வை ரத்து செய்யக் கோரியும், பேரூராட்சி நிர்வாகச் செயல்பாட்டைக் கண்டித்தும், முறையான குடிநீர் விநியோகம், சாலைப் பராமரிப்பு போன்ற பணிகளில் கவனம் செலுத்தக் கோரியும், திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் சி.எஸ். முத்துசாமி கோரிக்கையை விளக்கிப் பேசினார். மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், மாவட்டச் செயற்குழு உறுப்பினர் சந்திரசேகரன், மாவட்டக் குழு உறுப்பினர் கிருஷ்ணசாமி, எம்.எம். பொன்னுச்சாமி ஆகியோர் பேசினர்.

# பாசிசத்தை வெற்றி கொண்ட 80 ஆம் ஆண்டு விழா




1945 மே 9 அன்று சோவியத் செஞ்சேனை, யுத்த வெறியன் ஹிட்லரின் நாஜிப்படைகளைத் தோற்கடித்த நாள். அந்த வரலாற்று நிகழ்வின் 80வது ஆண்டு விழா, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வீரமிக்கப் போரை நடத்தி தெற்கு வியத்நாமை, வட வியத்நாமுடன் 1975 ஏப்ரல் 30 இல் இணைத்துச் சாதனை புரிந்தது சுதந்திர வியத்நாம். அதன் 50வது ஆண்டுவிழாவும் உலக மக்களால் கொண்டாடடப்படுகிறது.

இவ்விரு வரலாற்றுச் சிறப்புமிக்க விழாக்கள், இஸ்கஃப் கோவை மாவட்டக் குழுவின் சார்பில், மாநிலப் பொதுச் செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றன. மாநிலப் பொருளாளர் எஸ்.கோட்டியப்பன், கட்சியின் கிழக்கு மண்டலச் செலாளர் எஸ்.ஷண்முகம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

மு.வ.கல்யாணசுந்தரம் வரவேற்றார். வழக்கறிஞர் கே.சுப்ரமணியன், மார்க்சியக் கல்வியாளர் எஸ்.பாலச்சந்திரன், தொழிற்சங்கத் தலைவர் கே.எம்.செல்வராஜ், கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொருளாளர் ப.பா.ரமணி ஆகியோர் கருத்துரை வழங்கினர். இறுதியாக ஆர்.சிவக்குமார் நன்றி கூறினார்.

## உண்மைகள் வெளிப்படுவது..

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

இது நாடுகளுக்கு இடையே போராக மூண்டால் உலகம் தாங்காது என ஐக்கிய நாட்டு சபை மிகுந்த கவலையோடு தெரிவித்தது. பதற்றம் நிறைந்த நிலையில் அனைத்து அரசியல் கட்சிகளும், ஒன்றிய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவைத் தெரிவித்தன.

இந்நிலையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை ஒன்றிய அரசு கூட்டியது ஒரு முறை அல்ல; இரு முறை கூட்டியது. கூட்டத்தில் பல கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர். ஆனால் இரு கூட்டங்களிலும் மிகச் சிறந்த தேச பக்தரான, இரவு பகல் பாராது நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும் கவலைப்படுகின்ற பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ளாமல் கூட்டத்தைப் புறக்கணித்தது ஏன்? என்கிற நியாயமான கேள்விக்குப் பிரதமர் பதிலளிக்க வேண்டுமல்லவா?

இக்கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு இருந்தால், பயங்கரவாதிகள் திடீரென தாக்குதல் நடத்தினார்களே, தாக்குதல் நடத்தப் போவது குறித்து நமது உளவு அமைப்புகளுக்கு முன்கூட்டியே எதுவும் தெரியாதா? புகழ்மிக்க அமைப்பு என்ன செய்து கொண்டிருந்தது, உளவு அமைப்புகள் தோல்வியடைந்து விட்டனவா? அல்லது நடக்கட்டும் பின்னர் பார்த்துக் கொள்ளலாம், நாம் பலமாக பாகிஸ்தான் மீது படையெடுக்கலாம் என்று இருந்து விட்டார்களா? இருந்து எனப் பல கேள்விகள் உள்ளன. இவை குறித்து பிரதமர் விளக்கமளிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோருவார்கள் என்று உளவு அமைப்பு பிரதமருக்குத் தெரிவித்துவிட்டதா?


அதற்கு காரணமாக பிரதமர் கூட்டத்தில் பங்கேற்கவில்லையா? எனப் பல பல கேள்விகள் கேள்விகள் உள்ளன. நெருக்கடி மிக்க நிலையில் நாடாளுமன்றக் கூட்டத்தைக் கூட்டி நமது ஒருமித்த கருத்தை உலகிற்குத் தெரிவிக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சிகள் வேண்டுகோளையும் ஒன்றிய அரசு ஏன் புறக்கணித்தது? என்ற வினாவிற்கு விடையளிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒன்றிய அரசுக்கும், பிரதமருக்கும் இருப்பதாகக் கருதுகின்றோம்.

இரு நாடுகளுக்கிடையே போர் நிறுத்தப்பட்டு விட்டது என்று அமெரிக்க அதிபர் அறிவிப்பதேன்? அவர் நமது நாட்டிற்கு பிரதமர் ஆகிவிட்டாரா?

ஆகச் சிறந்த தேசபக்தராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ள நாட்டின் பிரதமர் நரேந்திரர் நாட்டு மக்களுக்கு உண்மைகளைக் கூறுவது நாட்டிற்கு நல்லது அல்லவா? நாட்டு நலனில் அக்கறையுள்ள மோடி உண்மையைச் சொல்ல முன் வருவாரா? முன்வர வேண்டும்!

உண்மைகள் ஒருபோதும் உறங்காது!
மீண்டும் சந்திப்போம்
வணக்கம்

தோழமைமிக்க,



**(இரா.முத்தரசன்)**
மாநிலச் செயலாளர்

## நாடாளுமன்றத்தை உடனே கூட்டு!

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொதுமக்களும் பலியாகி உள்ளனர். இது குறித்து பிரதமரின் உரையில் எதுவும் குறிப்பிடாதது அதிர்ச்சியளிக்கிறது.

இதேபோன்று, போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட விதமும் கவலையளிக்கிறது. அமைதியை விரும்பும் நாட்டு மக்கள் அனைவரும் பதற்றத்தைத் தணிக்க வேண்டும் என வலியுறுத்திய போதும், போர் நிறுத்தத்தை இந்தியா அல்லது பாகிஸ்தான் தலைமை முதலில் அறிவிக்கவில்லை. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முதலில் அறிவித்து, அதற்கான பெருமையைப் பெற்றார். இருநாடுகளுடனான வர்த்தகத்தை அதிகரிப்பது குறித்தும் அவர் அறிவித்துள்ளார்.

இது இந்தியாவின் இறையாண்மை மற்றும் கொள்கைத் திட்டத்தை தீர்மானிக்கும் தன்னாட்சி (StrategicAutonomy) ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள சரிவு குறித்த கேள்விகளை எழுப்புகிறது. சிம்லா ஒப்பந்தமும், மூன்றாம் தரப்பின் தலையீடு இல்லாமல் இருதரப்பும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நம்முடைய நீண்டகால அணுகுமுறையும் பெரும் பின்னடைவுக்கு ஆளாகியிருக்கிறது.

பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டதில் அமெரிக்காவின் பங்கு குறித்து பிரதமர் மோடி எதுவும் பேசாமல் மவுனமானது ஏன்? அமெரிக்கா மத்தியஸ்தம் செய்ததாக கூறப்பட்டதில் பின்பற்றப்பட்ட விதிமுறைகள் என்ன? அமெரிக்காவால் முன்மொழியப்பட்ட வர்த்தக விரிவாக்கம் எவை? இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் வெளியுறவுக் கொள்கையில் அவை எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தும்? என்பது குறித்து தமது உரையில் பிரதமர் மோடி பேசத் தவறியிருப்பது ஏற்க முடியாததும் ஆழ்ந்த கவலைக்குரியதும் ஆகும்.

எனவே, நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் வலியுறுத்துகிறது. தேசப் பாதுகாப்பு, இறையாண்மை, வெளியுறவுக் கொள்கை தொடர்பான இப்பிரச்சனைகள் குறித்து, நமது நாட்டின் மிக உயர்ந்த ஜனநாயக அமைப்பான மக்களவையில் விவாதிக்கப்பட வேண்டும், தொலைக்காட்சிகளில் நிகழ்த்தும் ஒருவழிப் பேச்சுகள் மூலம் இதனை விவாதிக்க முடியாது. நாடாளுமன்றத்தின் மூலம் மக்களுக்குப் பொறுப்புக்கூற கடமைப்பட்டவர் பிரதமர். இந்த பொறுப்புக்கூறலில் இருந்து ஒருபோதும் அவர் விலகிச் செல்ல முடியாது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

**தமிழில்: சிவ.இளமதி**

# நூல் நயம்

## அங்காயா வம்சம்




மனிதர்கள் வேட்டைச் சமூகமாக இருந்த போது, தாய்க்கு இருந்த முக்கியத்துவம் மெல்ல, மெல்ல குறைந்து, மனித குல வளர்ச்சிப் போக்கில் தாய்வழிச் சமூகம் எவ்வாறு ஒடுக்கப்பட்டது என்பதையும், அவசியமும், தேவையும் ஏற்படுகிற போது பெண்களின் தலைமை தானாக எழும், அது தன்னைத் தகவமைத்து, தன்னை சார்ந்தோரையும் பாதுகாக்கும் என்பதை இந்த அங்காயா வம்சம் நூல் வழியாக அறிய முடிகிறது. அதனால்தான் பெண்கள் ஆற்றல்மிக்கவள் என்பதை உலகம் சக்தி எனக் கொண்டாடுகிறது.

மனித குல வரலாற்றில் தாய்வழிச் சமூகம் ஒடுக்கப்பட்டு, ஆணாதிக்கச் சிந்தனை வளர சொத்து அடிப்படை காரணமாக இருந்தது. வேட்டையாடி உணவு தேடும் முறை மருவி, வேளாண்மை வளர்ச்சி பெற்ற போது, நிலம் மதிப்பு மிக்கதாக மாறியது. நிலத்தோடு சேர்த்து பெண்களும் சொத்தாகும் நிலை உருவானது. நாள்தோறும் உணவு தேடுகின்ற சூழல் மாற்றம் பெற்று உணவு தன்னிறைவு அடைந்தபோது, கலை, இலக்கியம், மதம் மற்றும் சிந்தனைகள் வளரத் தொடங்கின. இலக்கியங்கள் மற்றும் மதங்களின் படைப்பாளிகள் ஆண்களாக இருந்ததால், அவர்களுக்கு ஏற்றவாறு அதை அமைத்துக் கொண்டார்கள். பெண்கள் இரண்டாம் தரம் ஆக்கப்பட்டார்கள்.


ஆண்கள் உணவுக்காக வேட்டைக்குச் சென்றபோது குகைகளிலும், குடிசைகளிலும் இருந்த ஆதிச் சமூகப் பெண்கள் தாவரங்களின் வளர்ச்சி குறித்து கண்டறிந்த காட்சிகளை நடைமுறைப்படுத்தி வேளாண்மைத் தொழிலின் முன்னோடிகளாக மாறினார்கள். காலப்போக்கில் வேட்டையாடுதல் மூலம் கிடைப்பதை விட வேளாண்மை செய்வதில் கிடைக்கும் உணவுப் பொருட்கள் தன்னிறைவு அளிப்பதைக் கண்ட ஆண்கள், பெண்களிடம் இருந்த வேளாண்மையைப் பறித்துக்கொண்டு, மாற்றாக குழந்தை பெறுதல், வீட்டைப் பராமரித்தல் போன்ற சுமைகளைப் பெண்கள் மேல் இறக்கி, பிரதான தாய்வழிச் சமூக அமைப்பை ஒழித்துக் கட்டினார்கள்.

ஆனால் பெண்களைத் தெய்வமாகப் போற்றும் புதிய பண்பு நிலையை உருவாக்கினார்கள். பெண்களை தெய்வ நிலைக்கு உயர்த்தியது என்பது, பெண்களைப் போற்றுவதற்காக அல்ல, மாறாக அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்காக ஆண்கள் கண்டுபிடித்த வழியாகும். எனவே இந்தச் சூழ்ச்சி வலையில் இருந்து பெண்கள் தங்களை விடுவித்துக் கொண்டு, சமூகத்தைப் பாதுகாக்கச் சிலிர்த்து எழுதுகிற போது, மாற்றங்கள் நிகழும் என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | கண்மணி |
| பக்கம் | : | 376 விலை : 350 |
| வெளியீடு | : | இளா வெளியீட்டகம், 1, முதல் தளம், 30வது தெரு, ஓ பிளாக், அண்ணா நகர் கிழக்கு, சென்னை–600102 |

## சுதேசி நாயகன் வணிகப் போராளி த.வெள்ளையன்




மறைந்த தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் த.வெள்ளையன் அவர்களைப் பற்றிய இந்த நூல் என்.எஸ்.பிரதாப் சந்திரன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நெல்லிக் கனிகளைப் போல் சிதறிக் கிடந்த வணிகர்களை ஒன்று திரட்டி, சங்கமாக்கி, கட்டுக்கோப்புடன் வழி நடத்திய பேரவைத் தலைவர் த.வெள்ளையன், வணிகர் நலனில் மட்டும் அக்கரை செலுத்தவில்லை மாறாக, இந்தியாவில், தமிழ்நாட்டில் வணிகத்தைச் சீரழிக்க முயலும் அந்நிய மூலதனக் குவியலை எதிர்த்தும், அந்நிய வணிகப் பொருட்களின் ஆதிக்கத்தால் உள்ளூர் சுதேசித் தொழில்கள், விவசாயம் மற்றும் வியாபாரம் பாதிக்கப்படுவதை வணிகர் மத்தியில் விளக்கி, விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, சுதேசிப் பொருட்களை ஊக்குவிக்க வேண்டும் என்கின்ற நம்பிக்கை ஒளியை ஏற்படுத்திய தலைவர். தன் வாழ்நாள் எல்லாம் அந்நிய மூலதனத்தை, அந்நியப் பொருட்களை எதிர்த்துச் சமரசமற்றுப் போராடியவர்.

எந்தவித அரசியல் ஆசாபாசங்களுக்கும் ஆட்படாமல், வணிகர் நலனைக் குறிக்கோளாகக் கொண்டு, தமிழ்நாட்டின் விவசாயிகள், வணிகர்கள், பொதுமக்கள் இணைந்து சுதேசிப் பொருட்களைப் பாதுகாக்க வேண்டும், பரப்ப வேண்டும் என்று அயராது உழைத்த அந்த மகத்தான தலைவரைப் பற்றிய இந்நூல் காலத்தில் வெளிவந்துள்ளது.

– பிரியதர்ஷினி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | என்.எஸ்.பிரதாப் சந்திரன் |
| பக்கம் | : | 80 விலை : 100 |
| வெளியீடு | : | இன்சுவை பதிப்பகம், அண்ணா தெரு, ஞாயிறு – அஞ்சல், சோழவரம் வழி, சென்னை – 67 |

# கலை இலக்கியப் பூங்கா

## மூடநம்பிக்கையை புகுத்துவதற்கு கண்டனம்

அறிவியலுக்கு எதிராகப் புராண நம்பிக்கைகளைச்செம்மொழி ஆய்வு நிறுவனத்தின் மூலமாகப் புகுத்துவதற்குத் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலச் செயற்குழுக் கண்டனம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 27.4.2025 அன்று மாநிலத் தலைவர் எஸ்.கே.கங்கா தலைமையில் திருப்பூரில் நடைபெற்றது. இதில், பொதுச்செயலாளர் டாக்டர் த.அறம் உள்பட செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டனர். திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் வாழ்த்துரை வழங்கினார்.

ஒன்றிய அரசின் நிதி உதவி பெறும் செம்மொழி ஆய்வு நிறுவனத்தின் மூலமாக, இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்தும் அறிவியல் மனப்பான்மைக்கு எதிராக, புராண நம்பிக்கைகளை அறிவியல் உண்மைகளாகச் சித்தரிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படும் அகத்தியர் மாநாடு, கருத்தரங்கங்கள், அகத்தியர் குறித்த கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள் போன்ற நடவடிக்கைகளை செம்மொழி ஆய்வு நிறுவனம் உடனடியாகக் கைவிட வேண்டும்.



உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு பல்கலைக்கழகங்களின் வேந்தராகப் பொறுப்பேற்றுள்ள தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துகளை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தெரிவித்துக் கொள்கிறது. தமிழகத்தில் காலியாக உள்ள அரசு பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை உடனடியாக நியமிக்க வேண்டும் என அரசைப் பெருமன்றம் கேட்டுக் கொள்கிறது.

மேலும், தமிழ்நாடு அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் உதவிப் பேராசிரியர் மற்றும் இணைப்பேராசிரியருக்கான "பணிமேம்பாட்டு ஊதியம் (CAS) "நிலுவையில் உள்ள மண்டலங்களில் காலம் தாழ்த்தாமல் வழங்க வேண்டும். அதுபோலவே, ஓய்வு பெற்ற பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் ஓய்வூதியத்தை மாதம் தோறும் நிலுவையின்றி வழங்குவதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசால் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக நிரப்பப்படாமல் உள்ள பள்ளி ஆசிரியர்களுக்கான ஐம்பதாயிரம் நிரந்தரக் காலிப் பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும். மேலும், தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் நிரப்பப் படாமல் உள்ள 7000 நிரந்தரப் பேராசிரியர் காலிப் பணி இடங்களையும் நிரப்பிட வேண்டும். அதுவரை தற்காலிகமாக, கௌரவ விரிவுரையாளராகப் பணியாற்றும் பேராசிரியர்களுக்கு மாத ஊதியம் ரூ.25,000 என்பதை, பல்கலைக்கழக மானியக் குழு வழிகாட்டுதல் நெறிமுறைப்படி ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் வலியுறுத்துகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை 'தமிழ் வார விழா' கொண்டாடப்படும் என்றும், அதேபோன்று டிசம்பர் இறுதி வாரம் 'குறள் வாரம்' கொண்டாடப்படும் என்றும் அரசு வெளியிட்டுள்ள இரண்டு அறி விப்புகளையும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் வரவேற்கிறது.

சென்னையில் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களுக்குச் சிலை நிறுவப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதற்கு அரசுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது

சென்னை உயர்நீதிமன்றம் கல்வி நிலையங்களின் பெயர்களில் உள்ள சாதிப் பெயர்களை நீக்கிட உத்தரவிட்டுள்ளது. சாதி ஒழிப்புப் போராட்டத்தில் ஒரு மைல்கல்லாக விளங்கும் இந்த உத்தரவை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் வரவேற்கிறது போன்ற தீரமானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### முப்பெரும் விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், தேனி மற்றும் அன்பின் சேவை அறக்கட்டளை இணைந்து நடத்திய முப்பெரும் நிகழ்வில் பராரி திரைப்படம் வெளியிடப்பட்டது. அய்.தமிழ்மணி கருத்துரை வழங்கினார். இயக்குனர் எழிலரசன் பெரியவேடி அவர்களுக்குச் சிறந்த இயக்குனருக்கான விருது, நேர்மையான அரசுப் பணி செய்பவர்களுக்கு நேர்மை விருது, பொது மக்களுக்கு சேவை செய்பவர்களுக்குச் சிறந்த சமூக சேவை விருது, நாட்டுப்புறக் கலைஞர்களுக்குக் கலைச் சுடர் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

### அம்பேத்கர் பிறந்த தின விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் காஞ் சிபுரம் மாவட்டக் குழுவின் சார்பில், செங்கல்பட்டு ஓவியக் கவி வீரமணியின் புத்தர் அரங்கில், அண்ணல் அம்பேத்கர் பிறந்த தின விழா செங்கைக் கவி ஆ.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

அண்ணல் அம்பேத்கரின் திருஉருவப் படத்தினை மாவட்டத் தலைவர் ஜீவாமணிக்குமார் திறந்து வைத்து மரியாதை செய்தார். "அண்ணலுக்கு கவிதாஞ்சலி" என்கின்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. கவிஞர்கள் கல்லை ஜெயராமன், பன்னீர்செல்வன், ஜா.ஆயிஷா, சித்திகா, சா.கா.பாரதி ராஜா, சீனி சந்திரசேகரன், முத்து சொக்கலிங்கம், உதய செல்வன், ஆ.கிருஷ்ணன் ஆகியோர் மிகச் சிறப்பாக கவிதைகளை வழங்கினர். நிறைவாக கலை இலக்கியப் பெருமன்ற மாநிலக் குழு உறுப்பினர் பெ.கணபதி சுப்ரமணியன் கருத்துரை வழங்கினார்.

### மக்கள் இசை மேதை எம்.பி.சீனிவாசன் 100

கலை இலக்கியப் பெருமன்றக் காரைக்குடி கிளையின் கூட்டம் மதிப்புறு முனைவர் து.ஈசுவரன் தலைமையில், கவிஞர் மேனா முருகப்பா முன்னிலையில் நடைபெற்ற உரையரங்கத்தில் "மக்கள் இசை மேதை எம்.பி.சீனிவாசன் 100" எனும் பொருண்மையில் முனைவர் முருகேசுவரி முத்தாய்ப்பாய் பேருரையாற்றினார்.

தமிழக அரசின் மாநில அளவிலான இளங்கவிஞர் விருது பெற்ற பெருமன்ற உறுப்பினர் செல்வி சண்முகசிவானிக்கு பாராட்டும் சிறப்பும் செய்யப்பட்டன. பெரும்புலவர் ஆறு மெ.மெய்யாண்டவர் எழுதிய "தினைமொழி ஐம்பது" உரைநூலினை தமிழாசிரியர் தமிழ்ச்செல்வன் அறிமுகம் செய்திட, முனைவர் முருகேசுவரி எழுதிய "அறநெறி இருவரி" கவிதை நூலினை ஆறு மெ.மெய்யாண்டவர் அவர்கள் விமர்சனம் செய்து உரையாற்றினர்.

இரா.பூபதி இயக்கிய 'பாரதத் தேர்' நாடகம் பொ.முத்துராக்கு, மா.நீதி, நம்புக்கண்ணு, பூபதி ஆகியோரால் நடிக்கப்பட்டது. வழக்கறிஞர் சத்தியமூர்த்தி அவர்களின் மதிப்புரை, திருக்குறள் தியாகராாசனார் நன்றியுரை நிகழ்த்தப்பட்டுக் கூட்டம் நிறைவுற்றது.

### மாமேதை காரல் மார்க்ஸின் 208வது பிறந்த நாள் விழா

மாமேதை காரல் மார்க்ஸின் 208வது பிறந்த நாள் விழா, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சாத்தூர் கிளை சார்பில், சாத்தூர் தனுஷ்கோடி அரங்கத்தில் நடைபெற்றது. பெருமன்ற கிளைச் செயலாளர் கு.கணேசன், கவிஞர் கலிங்கல் சுவாமிநாதன், மாணவன் சுபதமிழ் பாடல்களைப் பாடினார். சிபிஐ மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், கலை இலக்கியப் பெருமன்றத்தின் பொதுச்செயலாளர் மரு.த.அறம் சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் பெருமன்ற மாநிலக் குழு உறுப்பினர் உ.இராமசுப்பிரமணியன், செயற்குழு உறுப்பினர் வ.நவநீதகிருஷ்ணன், சிபிஐ நகரச் செயலாளர் ஜான்ராஜா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### வாசிப்பு இயக்கம்

மே.1 அன்று உழைப்பாளர்கள் தினத்தில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தஞ்சை மாநகரம் ஒருங்கிணைத்த வாசிப்பு இயக்கம் 01.05.25 அன்று, மாநகரத் தலைவர் முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

கவிஞர் தமிழ்ஒளியின் மேதினக் கவிதையோடும், எழுத்தாளர் 'ராஜம் கிருஷ்ணன்' பற்றிய கட்டுரை வாசிப்பில் இருந்தும் தொடங்கியது.

இணைச்செயலர் முனைவர் தி.சங்கீதா, ஆய்வாளர் இரம்யா, விஜய மகேந்திரன் அறிவழகன் ஆகியோர் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர். மூத்த தோழர்கள் க.அய்யனார், தா.முகமது இக்பால், எஸ்.ராஜவேலு முதலானோர் கலந்து கொண்டனர்.

# ஆஷா பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்திடக் கோரி போராட்டம்






ஆஷா பணியாளர்களின் மாநிலம் தழுவிய தர்ணா போராட்டம் சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில், சங்கத்தின் பொதுச் செயலாளர் வஹிதா நிஜாம் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு ஏஐடியூசி தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன், பொதுச் செயலாளர் ம.ராதாகிருஷ்ணன், செயலாளர்கள் அ.பாஸ்கர், ஆதிமூலம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்கள். ஆஷா பணியாளர் சங்க நிர்வாகிகள் பச்சமுத்து, ஆண்டாள், சத்தியா, ரீனா, அமச்சீயார், கலைவாணி மற்றும் பலர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்கள்.

இறுதியில் எழுச்சியுரை ஆற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் ஒன்றிய மற்றும் தமிழ்நாடு மாநில அரசு, ஆஷா பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்து உதவிடுமாறு கேட்டுக் கொண்டார். தமிழ்நாடு முழுவதிலும் இருந்து இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆஷா பணியாளர்கள் பங்கேற்றார்கள்.

கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தில் பெற்ற படிவங்களை, தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்து வழங்கினார்கள்.

தமிழ்நாட்டில் பணிபுரியும் ஆஷா பணியாளர்களை கிராமப்புற செவிலியர் (விஹெச்என்) காலியிடங்களில் பணியமர்த்திப் பணி நிரந்தரம் செய்திடுக.

ஒன்றிய அரசின் பங்களிப்போடு, மாநில அரசின் பங்களிப்பையும் சேர்த்து மாதம் ரூபாய் 20,000 தொகுப்பூதியம் வழங்கிடுக.

ஆந்திர மாநில அரசு அறிவித்துள்ளபடி ஆஷா பணியாளர்களுக்கு இரண்டு லட்சம் பணிக்கொடை மற்றும் மகப்பேறு காலநலனாக விடுப்புடன் கூடிய ஊதியம் ரூபாய் 60,000 வழங்கி உத்தரவிடுக உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற கையெழுத்துப் படிவங்களை, தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்து வழங்கினார்கள்.

## மாநிலக் கட்சிக் கட்டிடப் புனரமைப்பு நிதி




விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் கட்சியின் மூத்த தோழர் இ.கணேசன் அவர்களின் பேரன் ஜி.எ.இராஜமுருகையன் வி.தீபிகாநாச்சியார் திருமணம் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

அவருடன் தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி, மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் வி.இரவி, நகரச் செயலாளர் விஜயன், இளைஞர் பெருமன்றம் மாவட்டச் செயலாளர் பகத்சிங் ஆகியோர் கலந்து கொண்டனர். மணமகன் வீட்டார் சார்பில் மாநிலச் செயலாளரிடம் கட்சிக் கட்டிடப் புனரமைப்பு நிதியாக ரூ.40 ஆயிரம் வழங்கப்பட்டது.

## ஜனசக்தி வளர்ச்சி நிதி



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட துணைச் செயலாளர் ஜேம்ஸ் – ஷோபா இணையரின் மகள் ஜிஷா ஜேம்ஸ் பி.ஏ, எல்.எல்.பி அவர்களுக்கும் திரு.பால்ராஜ் – பபிதா இணையரின் மகன் பி.ஜெரோம் பி.ஏ, எல்.எல்.பி ஆகியோரது திருமண வரவேற்பு விழா 27.4.2025 இல் கோவையில் நடைபெற்றது.

மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி மாவட்ட துணைச் செயலாளர் எம்.குணசேகரன் மாவட்டப் பொருளாளர் சி.தங்கவேலு மற்றும் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கே.எம்.செல்வராஜ், எஸ்.ராதாகிருஷ்ணன், வி.எஸ்.சுந்தரம், சாந்தி சந்திரன், வி.ஆர்.பாண்டியன், துரைசாமி, எஸ்.மோகன், மு.வ. கல்யாணசுந்தரம், வெங்கடாசலம் மற்றும் மேற்கு மண்டலச் செயலாளர் என்.சந்திரன், மாநில வி.தெ.ச.செயலாளர் பாஸ்கர் ராஜா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.5000 வழங்கப்பட்டது.

Posted at Egmore RMS Patrika Channel, Chennai - 600 008.

16 மே 18 மே 24 2025 ஜனசக்தி JANASAKTHI Tamil Weekly Cell: 9444331138 Day of Publication: Every Thursday

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026 WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026

Posted on Every Friday & Saturday Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

## தமிழ்ச்சமூகம் பெரிதும் போற்றும் எழுத்தாளர்

# தோழர் இராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு விழா














இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் (NFIW) தலைவர்களில் ஒருவரும் தமிழ்ச்சமூகம் போற்றும் எழுத்தாளருமான இராஜம் கிருஷ்ணன் நூற்றாண்டு விழா 10.05.2025 அன்று சென்னையில் பிட்டி தியாகராயர் அரங்கில் நடைபெற்றது. மாதர் தேசிய சம்மேளனத்தில் தேசியத் தலைவரும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான பி.பத்மாவதி தலைமை தாங்க, தேசியத் தலைவர் ஆனி ராஜா தொடங்கி வைத்து உரையாற்றினார்.

திமுக துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, "போராளி இராஜம் கிருஷ்ணன் களத்திலும் வாழ்விலும்" நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். அப்போது, "இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பெருமைக்குரிய தலைவர்களில் ஒருவராக இராஜம் கிருஷ்ணன் வாழ்ந்திருக்கிறார். அத்தகைய தலைவரை, போராளியைக் கொண்டாடுவதற்காக பெண்களால் அரங்கம் நிறைந்திருப்பது நெகிழச் செய்கிறது. உணர்வு செறிந்த இந்த மேடை மன நிறைவைத் தருகிறது" என்று கனிமொழி கூறினார்.

இராஜன் கிருஷ்ணனின் சமூகப் பார்வை என்ற தலைப்பில், பேராசிரியர் சரஸ்வதி, ஏஐடியூசி தேசியச் செயலாளர் வகிதா நிஜாம், பேராசிரியர் ஆதிரா முல்லை, பேராசிரியர் பாரதி சந்துரு ஆகியோர் கருத்துரையாற்றினர். இராஜம் கிருஷ்ணன் ஏறத்தாழ 60 ஆண்டுகள் தொடர்ச்சியாக எழுத்துப் பணியில் ஈடுபட்டிருந்தவர். களப்போராளி, மக்கள் இலக்கியம் படைத்தவர் என்பது உள்ளிட்ட சிறப்புகளை அவர்கள் எடுத்துரைத்தனர்.

"போராளி இராஜம் கிருஷ்ணன் களத்திலும் வாழ்விலும்" நூலின் ஆசிரியர் பா.ஜீவசுந்தரி, இராஜம் கிருஷ்ணனின் சிறப்புகளை எடுத்துக் கூறினார்.

மாநிலத் தலைவர் ஜி.மஞ்சுளா, தேசியச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் பா.ஜீவசுந்தரி ஆகியோர், இராஜம் கிருஷ்ணனின் முதுமைக் காலத்தில் துணை நின்ற தோழர்களைப் பாராட்டினர்.

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் மு.கண்ணகி வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர்கள் தனலெட்சுமி, மேரி திவ்யா, செண்பகவல்லி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநிலப் பொருளாளர் ரேணுகா தாமஸ் நன்றி உரையாற்றினார்.

# தொழிலாளர்களுக்கு அறிவியல் பூர்வமான குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டும்

## ஏஐடியுசி நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்










தொழிலாளர்கள் அனைவருக்கும் அறிவியல் பூர்வமான குறைந்தபட்ச ஊதியத்தைக் கணக்கிட்டு வழங்க ஒன்றிய மாநில அரசுகளை வலியுறுத்தி மாமேதை மார்க்ஸ் பிறந்த தினத்தில் ஏஐடியூசி சார்பில் நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலச் செயலாளர் ஆர்.தில்லைவனம் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் வெ.சேவையா துவக்கி வைத்தார். தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.சந்திரகுமார் ஆர்ப்பாட்டத்தினை நிறைவு செய்து பேசினார்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் தளவாய்புரம் செட்டியார்பட்டியில் ஏஐடியுசி சார்பில், விளக்கக் கூட்டம் அய்யணன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிபிஐ மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி, ஏஐடியுசி அமைப்புச் செயலாளர் வி.இரவி, ஒன்றியச் செயலாளர் கணேசமூர்த்தி, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பகத்சிங் ஆகியோர் விளக்கிப் பேசினார்கள்.

**திருச்சி:** திருச்சி மாநகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டப் பொதுச்செயலாளர் க.சுரேஷ் தலைமை தாங்கினார். மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் செல்வராஜ், சிவா, நேருதுரை, செல்வகுமார், முருகன், லோகநாதன் அன்சர்தீன், அஞ்சுகம் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

**தருமபுரி:** ஏஐடியூசி தருமபுரி மாவட்டக் குழு சார்பில், பெருந்திரள் ஆர்ப்பாட்டம் ஆட்சியர் அலுவலகம் முன்பு, மாவட்ட தலைவர் பா.முருகன் தலைமையில், கட்டுமானச் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சி.மணி முன்னிலையில், ஏஐடியூசி மாநிலத் தலைவர் எஸ்.எஸ்.காசிவிஸ்வநாதன், ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் கே.மணி ஆகியோர் கோரிக்கையை வலியுறுத்திப் பேசினர்.

# பணித் தளத்தில் உயிரிழந்தோர்க்கு இழப்பீடு வழங்க முதலமைச்சருக்கு விதொச கடிதம்

நூறு நாள் வேலைப் பணித் தளத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தி முதலமைச்சருக்கு, தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் நா.பெரியசாமி, பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் கடிதம் எழுதி உள்ளனர். அந்தக் கடிதம் வருமாறு:

"திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அடுத்துள்ள கழனிப்பாக்கம் கிராமத்தில் 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் 12.05.2025 அன்று வேலை செய்து கொண்டிருந்தனர். வெயிலின் தாக்கம் மிகக் கடுமையாக இருந்ததால், வேலை செய்து கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் அன்னபூரணி (75), வேண்டா (65), பச்சையம்மாள் (60) மற்றும் கனகா, தேவி, சம்பூர்ணம் மற்றும் பாஞ்சாலை ஆகியோர் பணித்தளத்தின் குளத்தருகே இருந்த ஆலமரத்தின் நிழலில் ஒதுங்கி இருந்தனர். இந்நிலையில், ஆலமரத்தின் பெரிய கிளை முறிந்து விழுந்ததில் அன்னபூரணி, வேண்டா இருவரும், மரத்தின் அடியில் சிக்கி, சிதைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டனர். மற்றவர்கள் படுகாயம் அடைந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு சென்று, சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் பச்சையம்மாள் மருத்துவமனை செல்லும் வழியில் உயிரிழந்து விட்டார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணியில் ஈடுபட்டுள்ள நேரத்தில் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு சிகிச்சை செலவு, சிகிச்சை பெறும் காலத்தில் ஏற்படும் குடும்பச் செலவு, உயிரிழப்பு நேர்வுகளுக்கு இழப்பீடு வழங்குவது போன்ற உதவிகளுக்காகச் சட்டத்தில் போதுமான விதிமுறைகள் வகுக்கப்படவில்லை என்பதைத் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். இதுகுறித்து அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, வேலை உறுதியளிப்புச் சட்டத்தில் பொருத்தமான திருத்தங்கள் செய்ய, உரிய முன்மொழிவுகள் தயாரித்து, ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் கோருகிறோம்.

மேலே குறிப்பிட்டுள்ள துயரச் சம்பவத்தைச் சிறப்பு நேர்வாகக் கருதி, முதலமைச்சர் அவர்கள் உயிரிழந்த தொழிலாளர்கள் குடும்பத்துக்கு குறைந்தபட்சம் ரூ.5 லட்சம் வீதம் இழப்பீடு வழங்கி உதவ வேண்டும், காயமடைந்த தொழிலாளர்களுக்குத் தேவையான சிகிச்சை வழங்குவதுடன், அவர்களது குடும்பங்களுக்கு நல நிதி வழங்க வேண்டும்" எனவும் கடிதத்தில் வலியுறுத்தி உள்ளனர்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.